REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

தினகரன்

THINAKARAN

தினகரன்

2023 ஓகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை

வரு. 91 இல. 204 | Tuesday 29, August, 2023 | 44 பக்கங்கள் | 50/-



தெல்லிப்பளை துர்க்காதேவி வருடாந்த தேர்த்திருவிழா நேற்று

பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர்; இன்று தீர்த்தம்

(பருத்தித்துறை விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க் காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று 07

பாதாள குழு செயற்பாடுகளுக்கு எவ்வகையிலும் இடமளிக்கப்படாது

பொலிஸ் நிலையம் தற்போது தலையீடற்ற நிறுவனமாக

லோரன்ஸ் செல்வநாயகம்

பாதாள உலக செயற்பாடுகளுக்கு எந்த வகையிலும் இடமளிக்கப்பட மாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் எத்தகைய செயற்பாடுகளுக்கும் அரசாங்கம் இடமளிக்காது என தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் நாட்டில் பாதாள உலக செயற்பாடுகளை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். 07

எந்தவொரு நிர்மாண பணிகளும் மேற்கொள்ள முடியாது;

திருமலை பெரிய குளம் விகாரை அமைப்புக்கு அனுமதி மறுப்பு

ஆளுநர் செந்தில் காரணத்தை விளக்கி தெளிவுபடுத்தல்

லோரன்ஸ் செல்வ நாயகம்

திருகோணமலை நிலாவெளி பெரிய குளம் பகுதியில் விகாரையொன்றை நிர்மாணிப்பதற்கான அனுமதி கிழக்கு 07

03 முற்றிலும் வரண்ட நிலையில் சுமார் 10,000 ஏரிகள்

நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது – அமைச்சர் அமரவீர

"அஸ்வெசும" நலன்புரி கொடுப்பனவுகளுக்காக 8 இலட்சம் குடும்பங்களுக்கு 5 பில். ரூபா நிதி வங்கிகளில் வைப்பு

நேற்று ஆரம்பம்; மாத இறுதிக்குள் நிறைவு

இந்தக் கொடுப்பனவு தொடர்பில் தவறான தகவல்களை வழங்கி இந்தக்கொடுப்பனவை எவராவது பெற்றுக் கொள்வார்களானால் அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அரசாங்கம் அறவிட நேரும்

லோரன்ஸ் செல்வநாயகம்

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்காக 8 இலட்சம் குடும்பங்களுக்கு ஐந்து பில்லியன் ரூபாவை வங்கிகளில் நேற்று வைப்புச் செய்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார். முதற்கட்டமாக அந்தக் கொடுப்பனவுகள் நேற்று முதல் வழங்கப்படுவதாக தெரிவித்த அவர், இந்த மாதத்திற்குள் கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைகளை நிறைவு செய்து அடுத்த 07

பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாடுகளில் இலங்கை மீளெழுச்சி

விரைவாக மீண்டெழுந்த நாடு என ஐ.நா தூதுவர் பாராட்டு

லோரன்ஸ் செல்வநாயகம்

பொருளாதார ரீதியில் கடந்த காலங்களில் வீழ்ச்சியடைந்திருந்த உலகின் 20 நாடுகளில் விரைவாக மீள கட்டியெழுப்பப்பட்டுள்ள நாடாக 07

03 கனடா விசா பெற்றுத் தருவதாக நிதி மோசடி

CID யினரால் ஒருவர் கைது

வெல்லம்பிட்டியவில் ஒருவர் சுட்டுக் கொலை!

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் இருவர் கைத்துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சம்பவத்தின் போது உயிரிழந்த நபர் 07

அரச வாகனங்கள் குறித்து விரைவில் கணக்கெடுப்பு

நிதியமைச்சு தீர்மானித்துள்ளதாக அறிவிப்பு

அரசாங்க அமைச்சுக்களின் திணைக்களங்கள், நிறுவன சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி 07

ஒன்லைன் மூலமான மோசடிகள்;

பொதுமக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஒன்லைன் மூலம் மேற்கொள்ளப்படும் மோசடிகள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கை மத்திய வங்கி நாட்டு மக்களை அறிவுறுத்தியுள்ளது. அதுதொடர்பில் அறிக்கையொன்றை 07

இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரிக்கும்

மாரடைப்பு மரணங்களுக்கு கொவிட் தடுப்பூசி காரணமல்ல

வதந்தியான செய்திகளை மறுக்கும் மருத்துவர்கள்

இலங்கையில் மாரடைப்பால் இறப்பவர்களில் பெரும்பாலானோர் கொவிட் தடுப்பூசி போட்டவர்கள் தான் என்ற வதந்திகளில் உண்மையில்லை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் மருந்துகள் மற்றும் 07

குருந்தூர் மலையில் குழப்பம் விளைவித்தோர் யார்?

முறைப்பாடு எதுவுமின்மையால் எவரையும் கைது செய்யவில்லை

விசாரணை நடத்த, கைது செய்ய முறைப்பாடு அவசியம்

குருந்தூர்மலையில் குழப்பத்தை தூண்டியவர் குறித்து எவ்வித முறைப்பாடுகளும் இல்லாததால் இது தொடர்பில் எவரையும் கைதுசெய்ய முடியாத நிலையில் உள்ளதாக 07

SJB எம்.பிக்கள் பலரும் விரைவில் ஜனாதிபதியுடன்

ஆதரவு வழங்குவர் என பி. ஹரிசன் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவை வழங்குவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. குருநாகலில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றிய போதே முன்னாள் அமைச்சர் 07

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே பாலம் அமைப்பதா?

பொது வாக்கெடுப்பு நடத்துமாறு கொழும்பு பேராயர் வலியுறுத்து

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலம் அமைப்பதற்கான அரசாங்கத்தின் முன்மொழிவு குறித்து கருத்து தெரிவித்த பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை, அத்தகைய நடவடிக்கைக்கு மக்களின் ஒப்புதலைப் பெறுவதற்கு பொதுவாக் கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். 07

ரூ. 27 மில். பெறுமதியான 1.3 Kg

14 தங்க பிஸ்கட்களுடன் கைதானவர் விளக்கமறியலில்

தாய்லாந்திலிருந்து வருகையில் சுங்கத்தில் சிக்கினார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தாய்லாந்தின் பெங்கொக் நகரிலிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ள விமானப் பயணியொருவர் சட்ட விரோதமாக கொண்டுவந்துள்ள 3 கோடி ரூபா பெறுமதியுள்ள 14 தங்க பிஸ்கட்கள் சுங்க அதிகாரிகளால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன. 07

பாராளுமன்ற அமர்வுகளின் போது

வாய்மூல விடைக்கான நேரத்தை வீணடிக்கும் சஜித் அணியினர்

பின்வரிசை எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் முறையீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்ற அமர்வுகளின் ஆரம்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்மூல விடைக்கான நேரம் ஒரு மணித்தியாலமாக வழங்கப்பட்டுவரும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்த்தரப்பினர் அந்த நேரத்தை வீண்விரயம் செய்வதாக ஆளும் கட்சி பின்வரிசை எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

அதுதொடர்பில் ஜனாதிபதி தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர்கள் ஜனாதிபதி 07

நீச்சல் தடாகத்தில் மூழ்கி பல்கலை மாணவன் பலி

மட்டக்களப்பைச் சேர்ந்த திலக்ஷன் என அடையாளம்

(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

ரஜரட்ட பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர் ஒருவர் நீச்சல் தடாகத்தில் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (27) இடம் பெற்றுள்ளது. மட்டக்களப்பு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த முருகதாஸ் திலக்ஷன் என்ற 21 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை அவருடன் மேலும் ஐந்து மாணவர்கள் நீச்சல் தடாகத்தில் இறங்கும்போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். ஏனைய மாணவர்கள் அவரை 07

இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.07.28 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு தீப்தி வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2006.09.26ஆம் திகதிய 862ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு **J.M.P.W. திலகரத்ன** அத்தாட்சிப்படுத்திய 2009.11.06ஆம் திகதிய 1038ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு **D.** கித்துல்கொட அத்தாட்சிப்படுத்திய 2011.11.01ஆம் திகதிய 3072ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு **J.M.C.H. ஜயவர்தன** அத்தாட்சிப்படுத்திய 2018.02.16ஆம் திகதிய 67ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு **A.M.K.R. அபேசிங்க** அத்தாட்சிப்படுத்திய 2019.04.22ஆம் திகதிய 852ஆம் இலக்க ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு **A.M.K.R. அபேசிங்க** அத்தாட்சிப்படுத்திய 2019.04.22ஆம் திகதிய 853ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று மீது 2023.07.04 வரையான வட்டியும் முதலுமாக 9,446,890.41 ரூபாயும் (ஒன்பது மில்லியன் நானூற்று நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறு ரூபாய் நாற்பத்தொரு சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தொன்பது தசம் இரண்டு ஐந்து வீதப்படி (29.25%) **5,500,000.00** ரூபாய் (ஐந்து மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் ஜய இசுர கடன் மீது 2023.07.04 வரையான வட்டியும் முதலுமாக 12,730,001.09 ரூபாயும் (பன்னிரண்டு மில்லியன் எழுநூற்று முப்பதாயிரத்து ஒரு ரூபாய் ஒன்பது சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பதின்மூன்று தசம் ஐந்து பூச்சியம் வீதப்படி (13.50%) 8,351,770.00 ரூபாய் (எட்டு மில்லியன் முந்நூற்று ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று எழுபது ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் தவணைக் கடன் மீது 2023.07.04 வரையான வட்டியும் முதலுமாக 7,659,329.57 ரூபாயும் (ஏழு மில்லியன் அறுநூற்று ஐம்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் ஐம்பத்தேழு சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டுத் தசம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 4,500,000.00 ரூபாய் (நான்கு மில்லியன் ஐந்நூறாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் கொவிட் 19 தொழிற்படு மூலதனக் கடன் மீது 2023.07.04 வரையான வட்டியும் முதலுமாக 1,911,034.26 ரூபாயும் (ஒரு மில்லியன் தொள்ளாயிரத்துப் பதினோராயிரத்து முப்பத்துநான்கு ரூபாய் இருபத்தாறு சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு நான்கு வீதப்படி (4%) 1,797,362.54 ரூபாய் (ஒரு மில்லியன் எழுநூற்றுத் தொண்ணூற்றேழாயிரத்து முந்நூற்று அறுபத்திரண்டு ரூபாய் ஐம்பத்து நான்கு சதம்) மீதான மேலதிக வட்டியும் வல்பிட்ட, நேபொட வீதி, களுத்துறை என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட பொம்புவல ரபர் மில்ஸ் (தனியார்) நிறுவனத்திடமிருந்து (வல்பிட்ட, நேபொட வீதி, களுத்துறை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. ரைகமகே பராக்கிரம பெரேரா என்பவரே இதன் பணிப்பாளராவார்) வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த 2006.09.26ஆம் திகதிய 862ஆம் இலக்க ஈட்டுமுறி, 2009.11.06ஆம் திகதிய 1038ஆம் இலக்க ஈட்டுமுறி, 2011.11.01ஆம் திகதிய 3072ஆம் இலக்க ஈட்டுமுறி, 2018.02.16ஆம் திகதிய 67ஆம் இலக்க ஈட்டுமுறி, 2019.04.22ஆம் திகதிய 852ஆம் இலக்க ஈட்டுமுறி, 2019.04.22ஆம் திகதிய 853ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று மீதான 9,446,890.41 ரூபாயையும் (ஒன்பது மில்லியன் நானூற்று நாற்பத்தாறாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறு ரூபாய் நாற்பத்தொரு சதம்) ஜய இசுர கடன் மீதான 12,730,001.09 ரூபாயையும் (பன்னிரண்டு மில்லியன் எழுநூற்று முப்பதாயிரத்து ஒரு ரூபாய் ஒன்பது சதம்) தவணைக் கடன் மீதான 7,659,329.57 ரூபாயையும் (ஏழு மில்லியன் அறுநூற்று ஐம்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று இருபத்தொன்பது ரூபாய் ஐம்பத்தேழு சதம்) கொவிட் 19 தொழிற்படு மூலதனக் கடன் மீதான 1,911,034.26 ரூபாயையும் (ஒரு மில்லியன் தொள்ளாயிரத்துப் பதினோராயிரத்து முப்பத்துநான்கு ரூபாய் இருபத்தாறு சதம்) அத்துடன் 2023.07.05ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி களுத்துறை அதிமேற்தரக் கிளையின் பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற் குறிப்பிடப்பட்ட அட்டவணை

1. **'**வல்பிட்டகெலே மற்றும் வல்பிட்டவிலவின் காணித்துண்டுகள் 1 மற்றும் 2A**'** என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எல். சேரசிங்க தயாரித்த 2017.12.19ஆம் திகதிய 4578ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தோட்டமுனே, களுத்துறை பெத்த, தொடங்கொட பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட 728E பொம்புவல கிராம சேவகர் பிரிவிலுள்ள பொம்புவல கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் களுத்துறை – நேபொட நெடுஞ்சாலையையும் கிழக்கில் காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் தெற்கில் காணித்துண்டு 2 மற்றும் 2A என்பவற்றின் மீதமுள்ள பகுதியையும் மேற்கில் காணித்துண்டு 2A மற்றும் காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 4578ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் நான்கு பேர்ச்சுகள் (ஏ1-ரூ0-பே4) அல்லது 0.4148 ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி மத்துகம காணிப் பதிவகத்தில் பக்கம் B 141/19இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டு 1 ஆனது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்

'வல்பிட்டகெலே மற்றும் வல்பிட்டவில' என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்ன தயாரித்த 1996.03.15ஆம் திகதிய 6724ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேற்குறிப்பிடப்பட்டவாறு பொம்புவல கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் பிரதான வீதியையும் கிழக்கில் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் தெற்கில் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதி மற்றும் காணித்துண்டு 2A என்பவற்றையும் மேற்கில் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதி மற்றும் காணித்துண்டு 2A என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 6724ஆம் இலக்க வரைபடத்தின்படி ஒரு ஏக்கர் நான்கு பேர்ச்சுகள் (ஏ1-ரூ0-பே4) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி களுத்துறைக் காணிப் பதிவகத்தில் பக்கம் G 273/109இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

2. **'**வல்பிட்டகெலே மற்றும் வல்பிட்டவிலவின் காணித்துண்டுகள் 1 மற்றும் 2A**'** என அழைக்கப்படும் காணியின் 4578ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேற்குறிப்பிடப்பட்டவாறு பொம்புவல கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் காணித்துண்டு 1ஐயும் கிழக்கில் காணித்துண்டு 1 மற்றும் காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதி என்பவற்றையும் தெற்கில் காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் மேற்கில் காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 4578ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே21.5) அல்லது 0.0544 ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி மத்துகம காணிப் பதிவகத்தில் பக்கம் டீ 141/20இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி காணித்துண்டு 2A ஆனது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்

'வல்பிட்டகெலே மற்றும் வல்பிட்டவில' என அழைக்கப்படும் காணியின் 6724ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2A என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி அதன்கண் காணப்படும் மண், கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேற்குறிப்பிடப்பட்டவாறு பொம்புவல கிராமத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் காணித்துண்டு 1ஐயும் கிழக்கில் காணித்துண்டு 1 மற்றும் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதி என்பவற்றையும் தெற்கில் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் மேற்கில் 5820ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 2இன் மீதமுள்ள பகுதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 6724ஆம் இலக்க வரைபடத்தின்படி இருபத்தொன்று தசம் ஐந்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே21.5) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி களுத்துறைக் காணிப் பதிவகத்தில் பக்கம் G 273/110 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

திரு எம்.எஸ்.ஏ. குலரத்ன
பிரதான முகாமையாளர்

இலங்கை வங்கி
களுத்துறை அதிமேற்தரக் கிளை

மாணவர்களின் தமிழ் பாட கல்வி திறனை ஊக்குவிக்குமுகமாக,இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் எம்.எஸ்.தாஜ்மஹான் ஒரு தொகை தமிழ் கவிதைப் புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.கொழும்பு ஸாஹிரா கல்லூரி அதிபர் ஏ.ஆர் மரிக்கார் மொஹம்மதிடம் இந்நூல்கள் கையளிக்கப்பட்டன. பாடசாலை ஆசிரியர் கவிஞர் யாழ் அஸீம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

சொற்கோ வி. என். மதியழகன் மின்னியல் நூல் வெளியீட்டுவிழா

மூத்த பத்திரிகையாளர் அனந் பாலகிட்ணர் தலைமை

இலங்கை ஒலிபரப்புத்துறையில், ஒரு நூற்றாண்டு காலத்தை பூர்த்தி செய்யவுள்ள இவ் வேளையில், தமிழ் ஒலிபரப்பில் பொற்காலப் பதிவென விபரிக்கப்படும் 'சொற்கோ, வி. என். மதி யழகன்'என்றஒலி–ஒளிபரப்புத் துறை நூல் கொழும்பில் வெளியிடப்படவுள்ளது.

வெள்ளவத்தை தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மூத்த பத்திரிகையாளர் அனந் பாலகிட்ணர் தலைமையில் இந்நூல் வெளியீட்டு விழாவை நடத்த இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடுகளை செய்து வருகிறது. 06,09,2023 புதன்கிழமை மாலை 4.30 க்கு இவ்விழா இடம்பெறும்.

மின்னியல் ஊடகத்துறை வாயிலாக உலகெல்லாம் ஒலியலையில் பரவி நின்று அதில், பொன்விழா காணும் மதியழகன் ஆரம்பத்தில், பத்திரிகைத்துறையில் அனுபவம் பெற்றிருந்தார்.

இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஐ. ரி. என்., இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,கனடா ரி. வி. ஐ. ஒளிபரப்பு நிலையம் என்பவற்றில் தொடர்ச்சியாகப் பணியாற்றிய மதியழகனை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அழைத்து நூல் வெளியீட்டு விழாவை நடத்துவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

'சொற்கோ வி. என். மதிஅழகன்' நூல் ஒரு பொன்விழா மலர் என்ற வரையறைக்குள் அடங்காது. அது,ஒரு தனிநபரின் அல்லது ஒலிபரப்பாளரின் சாதனைகளை மட்டும் பறைசாற்றவில்லை.

இலங்கையில் ஒலி–ஒளிபரப்புத்துறைகளின் வரலாற்றை,வளர்ச்சியை, சூழ்நிலைகளை தொழில் நுட்பங்களை, சவால்களை, திறன்களை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடியாகவும் பிரதிபலிக்கிறது. இந்நூலை வடிவமைத்த தமிழக ஒலிபரப்பாளரும் காந்தளகம்

செயல் முகாமையாளருமான கலை மாமணி சசிரேகா பாலசுப்பிரமணியனே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் சர்வதேச நாடுகளில் வாழும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், எழுத்துடகர்கள், மூத்த–சமகால இளந் தலைமுறை ஒலி,ஒளிபரப்பாளர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள்,உறவினர்கள் எனபலதரப்பட்டவர்களின் ஆக்கங்கள் மற்றும் மதியழகன் எழுதிய கட்டுரைகள், நேர்முகவர்ணனை பதிவுகள் ஆகியவற்றுடன் அவற்றைஆதாரப்படுத்தும் படங்கள், ஆவணங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளதால், இந்நூல் கனதி பெற்றுள்ளது.

கொழும்புத் தமிழ்ச் சங்க அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நாளை (30) புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் இயக்குநர் நடராஜா மணிவாணனின் "தொட்டி மீன்கள்" ,இதுவொன்றும் புதிதில்லை குறும் திரைப்படங்கள் காட்சிப் படுத்தலும், கதையாடலும்" இடம்பெறவுள்ளன. இந்நிகழ்விற்கு கொழும்புத் தமிழ்ச் சங்க தலைவர் கலாநிதி க.இரகுபரன் தலைமை தாங்குவார்.

தமிழ் நாடு சிவபுரம் வேத சிவாகம பரிபாலன சபை ரஸ்ட் (Trust) அமைப்பினர் அண்மையில், சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மாவுக்கு சிவநெறி காவலர் விருது வழங்கி கௌரவித்தது.சிவபுரம் கல்வி அறக்கட்டளை நிறுவுனர் ஏபி சுவாமிநாத சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,கொழும்பு ஜம்பட்டா வீதி அம்பிகா ஜோதிட நிலைய இயக்குநர் டாக்டர் சிவநேச சர்மாவுக்கு சோதிட ஞானபானு சிறப்பு பட்டமும் வழங்கப்பட்டது.வேத சிவாகம பாடசாலை தொடர் பாளர் சுவாமிநாத ஸ்ரீகண்ட சிவாச்சாரியார் இந்நிகழ்வுகளை ஒழுங்கு செய்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் விபாசனா தியானப் பயிற்சி

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின் அவர் களிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த ச. கோயங்காவினால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றிய அறிமுகம் நாளை 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கும், பிற்பகல் 3.00 மணிக்கு குருநகர் தொடர்மாடி சமூக மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலடி அரியாலை சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகிய இத் தியான முறை பற்றிய அறிமுகம் பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் றக்கா வீதியிலுள்ள கலைதூது கலாமன்றத்திலும் நடைபெற்றது.

விபாசனா தியானப்பயிற்சியானது மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கும் அனைத்து இன்னல்களுக்கும் காரணமான கோபம், பொறாமை, தீய எண்ணம், வெறுப்பு, காமம் போன்றவைகளை நீக்கும் பயிற்சி ஆகும். இத் தியானப்பயிற்சி மூலம் மனித வாழ்க்கையில் மனம், அன்பு, கருணை, நல்ல எண்ணம், பாலிரக்கம் நிறைந்ததாக மாறும் போது நமக்கும் நன்மை தருவதோடு, நம்மை சுற்றியுள்ள அனைவருடனும் ஒத்திசைவுடன் வாழும் அரிய பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். தம்மசேது விபாசக மைய ஆசிரியர் அ. சுப்பிரமணியம், விபாசனா ஆசிரியர் ஆர். மோகன் (சென்னை) மற்றும் தம்ம திரிவேணி அறக்கட்டளை குழு உறுப்பினர் சரவணன் ஆகியோர் இந்தப் பயிற்சி நெறியை வழங்குகின்றனர். மனத்தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். **எச்.எச். விக்கிரமசிங்க**

"மீண்டும் பாடசாலைக்கு" நிகழ்வில் பெற்றோர்களுக்கு விஷேட வழிகாட்டல்

வெலிகம தினகரன் நிருபர்

அறபாவின் "Back 2 School" ஐ, முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. இத்தொடர் வரிசையில் இம்மாதம் 30, 31ம் திகதிகளில் பெற்றோர்களுக்கான விசேட வழிகாட்டல் நிகழ்ச்சிகள், மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் நிகழ்வுகள், கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள், ஆசிரியர்களுக்கான விசேட அமர்வு என்பன இடம் பெறவுள்ளன.

நாளை (30) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பெற்றோர்களுக்கான விசேட வழிகாட்டல் நிகழ்வு கல்லூரியின் வெபா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது." பிள்ளை வளர்ப்பில் பெற்றோர் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்வது " எனும் தலைப்பில் இவ்விசேட வழிகாட்டல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதனை வெலிகம அறபா தேசிய பாடசாலையின் முன்னாள் ஆசானும், ஓய்வு பெற்ற அதிபரும், ஆசிரியர் பயிற்று விப்பாளரும், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும், "அரும்பு" இதழின் ஆசிரியருமான ஹாபிஸ் இஸ்ஸதீன் நடத்தவுள்ளார். கல்லூரி வெபா மண்டபத்தில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், தரம் 9, 10, 11, 12 ஐச் சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் கட்டாயம் சமுகமளித்து பயனடையுமாறு அழைக்கப்படுகின்றனர்.

மேலும் அன்றைய தினம் 1983 க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் ஒன்று சேர்ந்து தரம் 01முதல் கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது. இதில் சுமார் ஓய்வு பெற்ற 30க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் நினைவுச் சின்னங்களும், பரிசில்களும், வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இவர்களுள் காலம்சென்றவர்களுக்காக விசேட துஆப் பிரார்த்தனையும் இடம் பெறவுள்ளது.

31ம் திகதி வியாழக்கிழமை கல்லூரி மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இடம் பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

விசேட அதிதிகளாக தென் மாகாண தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேக் எம்.ஏ.எம் மஷாஹிர் (நளீமி) மற்றும் வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி எம். எ.எஸ் ஸனூலா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்களுக்கு,சுமார் பத்து லட்ச ரூபா பெறுமதியான நீர் வடிகட்டி தாங்கிகள் வழங்கி வைக்கப்பட்டன. முன்பிள்ளைப் பருவம் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ், இவை வழங்கப்பட்டன.கடற்றொழில் இராஜாங்க அமைச்சரும் களுத்துறை மாவட்ட ப் பாராளுமன்ற உறுப்பினருமான பியல் நிசாந்த இவற்றை வழங்கி வைத்தார். (பாணந்துறைமத்திய குறூப் நிருபர்)

கடற்றொழிலாளர் அஜித்குமார் மத்துகமவில் காலமானார்

அன்னாசிகல தமிழ் வித்தியாலயம் அனுதாபம்

மத்துகம அன்னாசிகல பிரிவைச் சேர்ந்த கடற்றொழிலாளர் டீ. அஜித்குமார் (வயது 32) கடந்த சனிக்கிழமை (26) திடீரென நோய்வாய்ப்பட்டு காலமானார். அன்னார் காலஞ் சென்ற தர்மகண்ணு மற்றும் சந்திரவள்ளி தம்பதிகளின் அன்பு மகனும் டீ. சரத்குமார் மற்றும் அன்னாசிகல தமிழ் வித்தியாலய ஆசிரியர் டீ. திலிப்குமார் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை புதன்கிழமை பி.ப.2.00 மணிக்கு அன்னாசிகல பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவுள்ளது.

அன்னாரின் மறைவு குறித்து அன்னாசிகல தமிழ் வித்தியாலயம் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதாகவும் அனுதாபச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித சிந்தனைகளை மேம்படுத்துவதன் மூலம் நாட்டில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு தம் சவிய சர்வதேச மன்றத்தின் ஊடாக நாடளவிய ரீதியிலான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பண வைபவமும் புலமைப் பரிசில் வழங்குதலும் வெல்லவாய மஹிந்த ராஜபக்ஷ மண்டபத்தில் நடைபெற்ற போது மன்றத்தின் தலைவர் பி.ரி.எஸ். குணத்திலக்க, ஊவா மாகாண கல்வி பணிப்பாளர் ஏ.எச்.ஆர். அமரதாச தம்சவிய திட்டத்தின் பணிப்பாளரான நாடகக் கலைஞர் சமந்த குமார கமகே மற்றும் ஆசிரியர்கள் அடங்கலாக அதிதிகள் பலரும் கலந்து கொண்டிருப்பதை படத்தில் காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
தினகரன்

2023 ஓகஸ்ட் 29 செவ்வாய்க்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.47
லுஹர் - 12.13
அஸர் - 03.22
மஃரிப் - 06.21
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆவணி 13
ராகுகாலம் : பகல் : 03.05 - 4.35வரை
சுபநேரம் : காலை : 10.35 - 12.05வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி படித்த இளைஞர்களிடம் உள்ளது

KIU பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் பந்துல குணவர்தன

நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத் தக்கூடிய உந்து சக்தி படித்த இளைஞர் மத்தியில் காணப்படுவதாக போக் குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

KIU பல்கலைக்கழகத்தின் 6வது பட்டமளிப்பு விழா கொழும்பில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதி யாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், ஒரு பட்டதாரியின் வாழ்க்கையில் சிறப்பு மைல்கல்லைக் குறிக்கும் ஒரு நாளாக பட்டமளிப்பு விழாவை கரு துகிறேன். ஒரு கல்வியியலாளராக எனது வாழ்நாளில் மிக நீண்ட காலம்

பிள்ளைகளுக்கு அறிவைப் புகட்டுவ தற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முன்னாள் கல்வி மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் என்ற ரீதியில் உங்கள் வெற்றிக்காக உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துகளைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

நீண்ட காலமாக நீங்கள் செய்த உறு தியான தியாகத்தின் பலனாக இன்று பட்டதாரிகளாகியுள்ளீர்கள். இது எதிர்கால உலகத்தை எதிர்கொள்ளும் கல்வித் தகுதியையும் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான தொடர்ச்சியான கொள்கைகள் மற்றும் நெறிமுறை களை உங்களுக்கு வழங்குகிறது.

ஒருவரைத் துல்லியமாகவும் விமர்ச னமாகவும் சிந்திக்கக் கற்றுக் கொடுப் பதே கல்வியின் பங்கு. 07

மாளிகாவத்தை வைத்தியசாலையில்;

நாலாம் மாடியிலிருந்து குதித்து ஒருவர் பலி

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு மாளிகாவத்தை சிறுநீரக சிகிச்சை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்த நபரொருவர் அந்த வைத்திய சாலையின் நான்காம் மாடியிலிருந்து கிழே குதித்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

மேற்படி நபர் 31 வயதுடைய வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவ ரென மாளிகாவத்தைப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மேற்படி நபர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த 07

மாதிவெல எம்.பிமார் வீட்டுத் தொகுதியில்

வீடு கிடைக்காதவர்களுக்கு 1 கோடியே 16 லட்சம் ரூபா

தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

மாதிவெலையிலுள்ள பாராளுமன்ற உறுப்பி னர்களுக்கான உத்தியோகபூர்வ வீட்டுத் தொகுதி யில் வீடுகள் கிடைக்காத 18 எம்.பிக்களுக்காக ஒரு கோடியே 16 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த அலுவலகம் அது தொடர்பில் வெளியிட் டுள்ள அறிக்கையில் 10 பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்காக 2021ஆம் ஆண்டு 07

வவுனியா இரட்டைக் கொலைச் சம்பவம்;

பிரதான சந்தேக நபரின் சகோதரன் மீது தாக்குதல்

அவசர சிகிச்சை பிரிவில் அனுமதி

வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலைச் சம்பவத்துடன் தொடர்பு டைய பிரதான சந்தேக நபரின் சகோதரர் மீது சிலர் தாக்குதல் மேற்கொண்டதில் அவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 07

முற்றிலும் வரண்ட நிலையில் சுமார் 10,000 ஏரிகள்

நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ளது – அமைச்சர் அமரவீர

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் கடும் வரட்சி காரணமாக 19 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் 10 ஆயிரத் துக்கும் அதிகமான குளங்கள் முழுமையாக வற்றிப்போயுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். 07

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட மாவட்டங்களில் கடும் உஷ்ணம்;

சிறுவர், வயதானோர், நோயாளர் தொடர்பில் அதிக கவனம் தேவை

நேற்று முதல் செப்டெம்பர் 07 வரை இந்த நிலை தொடரும்

வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட 8 மாவட் டங்களில் நிலவும் கடும் உஷ்ணம் காரணமாக நேற்று முதல் அது மக்களின் உடலில் உணரக் கூடிய மட்டத்தில் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, வடக்கில் முல்லைத் தீவு, வவுனியா, கிழக்கில் திருகோணமலை, 07

கனடா விசா பெற்றுத் தருவதாக நிதி மோசடி

CID யினரால் ஒருவர் கைது



கனடா விசா பெற்றுத்தருவதாக கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட பிரதான சந் தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளார். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் 05 பேரை ஏமாற்றி 26 இலட் சம் ரூபாவிற்கு மேல் பண மோசடி செய்துள் ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இதற்கு முன்னரும் கனடா விசாவினை பெற்றுத் தருவதாகக் கூறி பண மோசடி செய்த சம் பவம் ஒன்று பதிவாகியி ருந்ததுடன், அந்தச் சம்ப வத்தின் பிரதான சந்தேக நபர் இவரே என பொலிஸார் கண்டறிந்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின்

அதிகாரிகள் 23 பேருக்கு 7 கோடி ரூபா கொடுப்பனவு

எவ்வித அனுமதியுமின்றி வழங்கப்பட்டுள்ளது

லோரன்ஸ் செல்வநாயகம்

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரி யொருவர் மற்றும் ஏனைய 22 அதிகாரிக ளுக்கு சுமார் 7 கோடி ரூபா கொடுப்பனவை எந்தவித அனுமதியும் இன்றி வழங்கப்பட் டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த தொகை கடந்த 2022ஆம் ஆண்டு இவ்வாறு எந்த அனுமதியுமின்றி வழங்கப் பட்டுள்ளதாகவும் அந்த அலுவலகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தர்களுக் காக கொரோனா சூழ்நிலை ஊக்குவிப்பு கொடுப்பனவு திட்டம் 07

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
குலுக்கிய திகதி 2023.08.27
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5219
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,199,160.00
ஆங்கில எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 8 8 7 3 1 3

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1567
27/08/2023
34146
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.405,712,080.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 05
வெற்றி இலக்கங்கள் 08 17 35 74

ராசி சுப மலன்
Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 528
சீட்டிழுப்பு திகதி 2023-08-27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,599,828.80
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 21 39 45 47
விசேட இலக்கினம் விருச்சிகம்

கொவிதெத
சீட்டிழுப்பு இலக்கம் 3461
சீட்டிழுப்பு திகதி 2023.08.27
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,790,442.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 02 63 67 76
விசேட எழுத்து R
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 15119

ஒரு Lucky 7 லக்க
திகதி 27.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0045
வெற்றி இலக்கினம் கன்னி
L7 இலக்கம் 1 1
வெற்றி இலக்கங்கள் 8 6 1 8 4 4
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,252,893.04

தன நிதானய
தேதி 2023/08/27
சீட்டிழுப்பு இலக்கம் 1249
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 106,660,536.80
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 01 30 41 76
விஷேச ஆங்கில எழுத்து Z
Double Chance இலக்கம் 28035

தினகரன்

கலாசார படுகொலைக்கும் உள்ளாகும் சீன உய்கர் சமூகம்

உய்கர் தம்பதியினர் பிரிக்கப்பட்டு பிள்ளைகள் அனாதை ஆக்கப்படுவதாக குற்றச்சாட்டு!

சீனாவின் ஸின்ஜியாங் மாகாணத்தில் வசிக்கும் உய்கர் சிறுபான்மை மக்கள் மத்தியில் விவாகரத்து பெறுவது அரிது என்றும் ஆனால் தற்போது அவர்கள் மத்தியில் விவாகரத்து அதிகரித்து காணப்படுவதோடு அனாதை குழந்தை களின் எண்ணிக்கையும் அதிகமாகி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

உய்கர் முஸ்லிம் சமூகத்தின் மீது மோசமான வன்முறைகளையும் மனிதாபிமானமற்ற செயல்களையும் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து வரும் சீன கம்யூனிஸ்ட் கட்சி, அச் சமூகத்தின் கலாசாரத்தை வேரறுத்து கலாசார படுகொலையையும் நிகழ்த்தி வருவதாக உலக உய்கர் காங்கிரசின் பேச்சாளரான டில்மாட் எர்கஸிட் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு குற்றச்சாட்டின் பேரில் முதலில் கணவனையோ அல்லது மனைவியையோ சீன அதிகாரிகள் கைது செய்வதாகவும் பின்னர் அக் 'குற்ற'ச் செயல்களுக்கு உடந்தை என மற்றவ ரையும் கைது செய்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதும் குழந்தைகள் பலவந்தமாக அனாதையாக்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டும் ரெக்ஸிட் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்வதாக காரணம் காட்டும் சீன அதிகாரிகள், குழந்தைகளை மீள் கல்வி என்ற பெயரிலான மூளைச்சலவை முகாம்களுக்கு அனுப்பி வைக்க படுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குடும்பங்கள் சிதைக்கப்படுவதால் அதிகாரிகள் கைது செய்வதாகவும் பின்னர் அக் 'குற்ற'ச் செயல்களுக்கு உடந்தை என மற்றவ ரையும் கைது செய்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதும் குழந்தைகள் பலவந்தமாக அனாதையாக்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டும் ரெக்ஸிட் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்வதாக காரணம் காட்டும் சீன அதிகாரிகள், குழந்தைகளை மீள் கல்வி என்ற பெயரிலான மூளைச்சலவை முகாம்களுக்கு அனுப்பி வைக்க படுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஒரு குற்றச்சாட்டின் பேரில் முதலில் கணவனையோ அல்லது மனைவியையோ சீன அதிகாரிகள் கைது செய்வதாகவும் பின்னர் அக் 'குற்ற'ச் செயல்களுக்கு உடந்தை என மற்றவ ரையும் கைது செய்து வெவ்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுவதும் குழந்தைகள் பலவந்தமாக அனாதையாக்கப்படுகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டும் ரெக்ஸிட் பராமரிப்புக்காக எடுத்துக் கொள்வதாக காரணம் காட்டும் சீன அதிகாரிகள், குழந்தைகளை மீள் கல்வி என்ற பெயரிலான மூளைச்சலவை முகாம்களுக்கு அனுப்பி வைக்க படுகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குடும்பங்கள் சிதைக்கப்படுவதால்

தினகரன்
THINAKARAN
திகைரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆவணி மாதம் 13ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஸபர் பிறை 12

குறள் தரும் சிந்தனை



பெருமை பெருமிதம் இன்மை சிறுமை
பெருமிதம் ஊர்ந்து விடல்

ஆணவமின்றி அடக்கமாக இருப்பது பெருமை எனப்படும். ஆணவத்தின் எல்லைக்கே சென்று விடுவது சிறுமை எனப்படும்.

புதியவகை தொற்றுவியாதிகள் விடயத்தில் அவதானம் தேவை!

தற்காசியாவில் சிறந்த சுகாதார சேவை வழங்கும் நாடாக இலங்கை விளங்கிக் கொண்டிருக்கின்றது. பல தசாப்த காலமாக இலவச சுகாதாரசேவைக் கொள்கையை முன்னெடுத்துவரும் இந்நாடு இதற்கென வருடாவருடம் கோடிக்கணக்கான ரூபாவை செலவிட்டு வருகின்றது. இதன் பிரதிபலன்களை மக்களும் அனுபவித்து வருகின்றனர்.

அவற்றில் நோய்கள் பல கட்டுப்பாட்டு நிலையில் இருப்பது சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும். குறிப்பாக போலியோ, மலேரியா, யானைக்கால், சின்னமுத்து ஆகிய நோய்கள் முற்றாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அதனை உலக சுகாதார ஸ்தாபனமே உறுதிப்படுத்தி இருக்கிறது.

அதேநேரம் பல தொற்று நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் தடுப்பூசிகளும் இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இதற்காக தேசிய தடுப்பு மருந்தேற்றல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முற்றிலும் இலவசமாக முன்னெடுக்கப்படுகின்ற ஒன்றாக சுகாதார சேவை விளங்குகின்ற அதேநேரம், அதற்குத் தேவையான விசாலமான கட்டமைப்பு வசதியையும் இந்நாடு கொண்டிருக்கின்றது. இதன் ஊடாக மிகுந்த உயர்தரத்தில் சிறப்பான முறையில் இச்சேவை மேற்கொள்ளப்படுகிறது.

இவற்றின் பயனாக மேலும் பல நோய்கள் கட்டுப்பாட்டு நிலையை அடைந்துள்ளதோடு, எதிர்பார்க்கப்படும் உயிர்வாழும் வயதெல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

நாட்டின் சில பிரதேசங்களில் சில நோய்கள் அவ்வப்போது தலைதூக்கும் போது அவை உரிய சுகாதார மருத்துவ நடவடிக்கைகளின் ஊடாக விரைவாகக் கட்டுப்பாட்டு நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றன.

அந்த வகையில் சில தினங்களுக்கு முன்னர் காலி சிறைச்சாலையில் இரண்டு சிறைக்கைதிகள் அண்மையில் மரணமடைந்தனர். அவர்களின் உடல்பாகங்களின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்திய சுகாதார அமைச்சு, இவர்களது மரணத்திற்கு மெனிங்கோகோகல் என்ற பக்டீரியா நோயே காரணமென அறிவித்தது.

அதேநேரம் இந்நோய்க்குரிய அறிகுறிகளைக் கொண்டுள்ள மேலும் சில சிறைக்கைதிகள் அடையாளம் காணப்பட்டதோடு, அவர்கள் உடனடியாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிக்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் அங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நோயினால் இரு கைதிகள் மரணமடைந்தும் இன்னும் சில கைதிகள் இந்நோய்க்கென வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தின. ஆனால் 'இந்நோய் சமூகத்தில் பரவவில்லை' என்று சுகாதார துறையினர் அறிவித்ததோடு

இக்கைதிகளின் மரணத்தைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அச்சம் நீங்கலாயிற்று.

ஆனால் மெனிங்கோகோகல் நோய்க்கு உரிய அறிகுறிகளுடன் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த எட்டு மாதக் குழந்தையொன்று கடந்த சனியன்று உயிரிழந்துள்ளது. இக்குழந்தையின் பிரேதத்தில் பெறப்பட்ட உடல் பாகங்களின் மாதிரிகளும் மேலதிக பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சுகாதார அதிகாரிகள், 'குளிர்த்தன்மை, காய்ச்சல், கடும் தலைவலி, சோர்வு, வாந்தி போன்றவாறான அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாகத் தகுதியான மருத்துவர்களை அணுகி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றக்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

அதனால் இந்நோய்க் காரணி குறித்து மக்கள் மத்தியில் மீண்டும் அச்ச நிலை ஏற்படக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. அதன் காரணத்தினால் இந்த பக்டீரியா தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இந்த பக்டீரியாவானது குருதியிலும், மூளையிலும் முள்ளந்தண்டிலும் தொற்று ஏற்படுவதற்கும் மூளைக் காயச்சலுக்கும் கூட காரணமாக அமையலாம் எனக் குறிப்பிட்டுள்ள மருத்துவர்கள், இவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய இந்த பக்டீரியா சுவாசத்தின் ஊடாகவே பெரும்பாலும் தொற்றக்கூடியது எனத் தெரிவித்தனர். இந்நோய்க்கு உள்ளானவர்களுக்கு கடும் காய்ச்சல், வாந்தி, கடும் தலைவலி, குமட்டல், கழுத்தில் தசை இறுக்கம் உள்ளிட்ட பல அறிகுறிகளும் வெளிப்படலாம்.

ஆகவே தற்போதைய சூழலில் இந்நோய் அறிகுறிகள் குறித்து கவனயீனமாகவோ அசிரத்தையாகவோ நடந்து கொள்ளக்கூடாது. அது ஆரோக்கியமானதல்ல. இது நாட்டின் தென்பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ள பக்டீரியா நோய் என்றாலும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் இந்நோய்த் தவிர்ப்பு தொடர்பில் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டும். அது மிகவும் அவசியமானதாகும்.

editor.tkn@lakehouse.lk

மட்டக்களப்பு-களுதாவளை கொம்புச்சந்தி அம்மன் ஆலய சடங்கு நாளை நிறைவு

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிராமத்தின் மத்தியில் பிரதான வீதியில் அமைந்துள்ள தொன்மைமிகு வரலாற்றுச் சிறப்புமிக்க கொம்புச்சந்தி அம்மன் ஆலயத்தின் திருச்சடங்கு கடந்த 27 ஆம் திகதி ஆரம்பமாகி நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு தீமிதிப்புடன் நிறைவுறுகிறது.

ஆலய பரிபாலனசபைத் தலைவர் க.விநாயகமூர்த்தி தலைமையில் வைபவங்கள் நடைபெறுகின்றன. சடங்கு காலங்களில் கூட்டுப் பிரார்த்தனை, சமய சொற்பொழிவுகள் முதலிய இந்து சமய கலாசார நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

ஆலய வரலாறு மிகவும் தொன்மையானது. பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு உருவம் இல்லாத அருவ நிலையில் கண்ணகை அம்மன் வழிபாடு இடம்பெற்று இருக்கின்றது. கண்ணகை அம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய கொம்புமுறி விளையாட்டு மிகவும் சிறப்பானதாகும்.

போர்த்தேங்காய் அடித்தல், கொம்பு முறித்தல், கொம்புத்தட்டு எடுத்தல், வடசேரி, தென்சேரி, தேர்கள் இழுத்தல், சடங்குகள் செய்தல், குளிர்த்தில் ஆடுதல் முதலிய நிகழ்வுகள் அக்காலத்தில் இடம்பெற்றன. இதனால் களுதாவளை கிராமம் சுமார் ஒரு மாத காலம் விழாக்கோலம் பூண்டு இருக்கும். இக்கொம்பு முறி விளையாட்டுக்காண மக்கள் பல ஊர்களிலும் இருந்து வந்து இருக்கின்றனர்.

மேலும் இக்கொம்புமுறி விளையாட்டைக் காண்பதற்கு வெல்லாவெளி கண்டத்தைச் சேர்ந்த நாதனைப் பகுதி வேடுவர்கள் வந்தார்கள் என்று களுதேவாலயக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. 'நாதனை ஈராம் மரபார்கள் குறிஞ்சி வேடர் வரவதானார் எல்லை நாள் இவர் வந்த காலம் கேளீர் தொள்ளாயிரத்து நாளாம் ஆண்டு ஆனி மாதம் பத்தொன்பதாம் திகதி புதன்கிழமை

பின்வரை அச்சாதியாரும் வரவரவு காணேன்' என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

ஆயிரத்துநூறு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாலயத்தில் கொம்புமுறி விளையாட்டு நடைபெற்றதை இதனால் அறிய முடிகின்றது. எனவே இவ்வாலயத்தின் தொன்மையும் விளங்கக் கூடியதாகவுள்ளது.

பின்பு 1944 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மழை ஒறுத்து பஞ்சம், பசி, பட்டினி, நோய், பிணி ஏற்பட்டன. அதன் காரணமாக இவ்வாலயத்தில் மழை வேண்டி மாரியம்மன் வழிபாட்டு சடங்கு மேற்கொண்டார்கள்.; மழையும் பொழிந்தது. துன்பமெல்லாம் நீங்கியது. அதனைத் தொடர்ந்து மாரியம்மன் சடங்கு இடம்பெற்று வருகின்றது. எனவே மக்கள் அன்று முதல் இன்று வரையும் கொம்புச்சந்தி அம்மன் ஆலயம் என்றே அழைத்து வருவது தனிச்சிறப்பாகும்.

களுதாவளை அம்மன் ஆலய வருடாந்த சடங்கு ஆவணி மாதத்துப் பூரணையை இறுதி நாளாகக் கொண்டு மூன்று நாட்களுக்கு ஐந்து சடங்குகள் இடம் பெறுகின்றன. மேலும் வெள்ளிக்கிழமைகளிலும் பூரணை தினங்களிலும் தைப்பொங்கலிலும் சித்திரை புத்திரனார் தினத்திலும், அத்துடன் விசேட தினங்களிலும் பூசைகள் நடைபெறுகின்றன. எனவே மக்கள் கொம்புச்சந்தி அம்மனை வழிபட்டு நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றி வருகின்றனர். ஆகவே, 'மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது' என்பதற்கு ஏற்ப களுதாவளை கொம்புச்சந்தி அம்மனின் அருளாட்சி மிகவும் அளப்பெரியது.

நாராயணபிள்ளை நாகேந்திரன்...✍
ஓய்வு நிலை அதிபர், களுவாஞ்சிகுடி

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை யாழ்நகரில் நடத்தும் IVF கருத்தரிப்பு ஆலோசனை முகாம்

இந்தியாவின் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை எதிர்வரும் செப்டம்பர் 8, 9, 10 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணத்தில் மருத்துவ ஆலோசனை முகாமை நடத்தவிருக்கிறது. இந்த முகாமில் கருத்தரித்தலுக்கான ஆலோசனை மற்றும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. கோயம்புத்தூரில் இம்மருத்துவமனை 1975 இல் நிறுவப்பட்டது.இம்மருத்துவமனை சிக்கலான நோய்களுக்கும் திறம்படச் சிகிச்சை அளித்து வருகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பே IVF கருத்தரித்தல் சேவையை அறிமுகப்படுத்தியது.

IVF துறையில் புகழ் பெற்ற மருத்துவர்களான எம்.எஸ்.லட்சுமி மற்றும் சுகன்யா ஆகியோர் மருத்துவம் மேற்கொண்டுவருகின்றனர்.கருவுறாமைபிரச்சினைகள் உள்ள தம்பதிகளுக்கு தகுந்த ஆலோசனை வழங்குவதற்காக மருத்துவர் சுகன்யா யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள முகாமுக்கு வருகை தருகிறார். பிறநாடுகளில் இருந்து கருத்தரித்தல் சிகிச்சைக்கு வருபவர்களுக்கு அவர்கள் சொந்த

நாட்டிற்குத் திரும்பும் வரை விமான நிலையத்திலிருந்து இறுதி வரையிலான சேவைகள் (End to End Service) வழங்கப்படும்.

பல்கேரியா, ஆபிரிக்கா, பங்களாதேஷ் போன்ற பல நாடுகளில் இருந்து கருவுறாமை பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. IVF இன் சமீபத்திய முன்னேற்றம் மூலம், மருத்துவமனை சர்வதேச தரநிலையில் வெற்றியை பெ ற்றுள்ளது.

கருவுறுதலில் பிரச்சினைகள் உள்ள தம்பதிகளுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை பதிவு செய்யப்பட்ட நன் கொடையாளர் சேவைகளை வழங்குகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் IVF நிபுணர்கள், தீர்க்க முடியாத சில நோய்களை இனங்கண்டுள்ளனர்.

டொக்டர் சுகன்யா

ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் உள்ள IVF துறை குழந்தை இல்லா புற்றுநோயாளிகளுக்கு கூட சிகிச்சை வழங்குகிறது. சிகிச்சையை நாடுவோர் தங்குமிடத்தைத் தெரிவு செய்யலாம். கர்ப்பிணிகள் ஆலோசனையை பெற்றுக் கொள்ள முடியும். ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையின் இலட்சியம் மிக உயர்ந்த, தரமான மருத்துவ சேவை வழங்குவதாகும். யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை யின் மருத்துவ முகாம் நம்பிக்கையின் விளக்கமாகவும், கனவுகளுக்கான புகலிடமாகவும், மனித

முயற்சியின் சான்றாகவும் நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் MEDICARE 2023 இற்கு வருகை தந்து கருத்தரிப்புக்கான ஆலோசனை பெறுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு:
Thajudeen Ahamed. M
Manager Marketing & International Affairs
Preventive Medicare PVT. LTD.
+919159502714 Whatsapp

கபில்வத்தையை நோக்கி சித்தர்கள் குரல் அமைப்பினரின் பாதயாத்திரை ஆரம்பம்

பிரபல இந்திய பணவளக்கலை நிபுணர் குபேரகுருஜீ ஆனந்த் சகிதம் சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் இன்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை ஆதி கதிர்காமம் என அழைக்கப்படும் கபில்வத்தைக்கு யாத்திரையை ஆரம்பிக்கின்றனர்.

இலங்கையில் சித்தர்களின் தாய் வீடு என்று போற்றப்படும் ஆதி கதிர்காமம் கபில்வத்தைக்கான அற்புதமான, அமானுஷ்யமான கபில்வத்தை காட்டுவழி யாத்திரை இன்று காலை மொனராகலையிலிருந்து ஆரம்பமாகிறது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான 30 பக்தர்கள் அடங்கிய குழுவினர் இதில் பங்கு பற்றுகின்றனர். சித்தர்கள் குரல் அமைப்பின் தலைவர் ஆதித்தன், உபதலைவர் மனோகரன் ஆகியோர் ஏற்பாட்டில் நமசிவாய சிவயோகி மகேஸ்வரன் சுவாமிகளின் வழிகாட்டலில் தியாக ராஜா ஜீ, சமய ஆர்வலர்களான வி.ரி.சகாதேவராஜா, கே.ஜெயசிறில் உள்ளிட்டோர் பயணமாகின்றனர்.

இக்குழுவினர் செவ்வாய்க்கிழமை மற்றும் புதன்கிழமை ஆகிய இரு தினங்களும் கபில்வத்தையில் தங்கியிருந்து வழிபாடியற்றுவார்கள்.

எந்தவித வெளியுலக தொடர்புமே இல்லாத சித்தர்களின் புனித பூமியாக கபில்வத்தை உள்ளது.

முருகப்பெருமான் தவமியற்றி, அற்புத சக்திகளை பெற்று ஆதி சமாதியாகி ஒளியில் கலந்த அற்புத இடமாக இந்துக்கள் அவ்விடத்தைப் போற்றுகின்றனர். நவகோடி சித்தர்களுக்கும் முருக பெருமான் தவத்தை கற்றுக் கொடுத்த இடம் அதுவாகும்.

காரைதீவு குறூப் நிருபர்...✍

'தோள் கொடு தோழா 97 நண்பர்கள் வட்டம்' ஏற்பாட்டில் சிறார்களுக்கான மருத்துவமுகாம்

'தோள் கொடு தோழா 97 நண்பர்கள் வட்டம்' அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை (26) பொத்துவில் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் சிறுவர்களுக்கான இலவச மருத்துவமுகாம் நடைபெற்றது.

பொத்துவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட, லண்டனில் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர்களாகக் கடமையாற்றும் வைத்தியர்களான பௌமி ஹசன், ஷர்மி ஹசன் ஆகியோர் பங்குபற்றி 100 இற்கும் மேற்பட்ட 14 வயதிற்குட்பட்ட சிறார்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை வழங்கினர்.

நீண்ட நாட்களாக பாரிய நோய்களால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்ற மற்றும் ஆரம்ப கட்டப் பாதிப்புகளுக்கு உள்ளான சிறுவர்களுக்கும் இங்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், இம்முகாமில் மூவின மக்களும் பயன் பெற்றுக் கொண்டனர்.

இம்முகாமில் பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் 97 நண்பர் வட்ட அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

றிசாத் ஏ. காதர்...✍
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

SJB எம்.பிக்கள்....

பீ.ஹரிசன் இதனை தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "எதிர்வரும் செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு விழாவின் போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அக்கட்சியில் இணைந்து கொள்வார்கள் என நம்புகின்றோம். கடந்த ஆண்டு தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வாக்களித்தனர். ஆகவே அவர்கள் அனைவரும் மீண்டும் கட்சியில் இணைவதற்கு ஆர்வமாக உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் கூட அறிந்திருகின்றார்.

அது செப்டம்பர் 10 ஆம் திகதி இடம்பெறும் என நம்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும்...

இலங்கையின் சில பகுதிகளை அரசாங்கம் பல்வேறு நாடுகளுக்கு விற்பனை செய்து அதன் அழிவை நோக்கி செல்வதாக பேராயர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை எப்பொழுதும் சுதந்திர நாடாகவே இருந்து வருகிறது என கூறிய பேராயர், "நாங்கள் எந்த ஒரு நாட்டுக்கும் அடிமையாக இருந்த தில்லை" என்றார். பொதுமக்களின் அனுமதியின்றி இவ்வாறான தீர்மானங்களை எடுப்பது தவறானது என வலியுறுத்தியுள்ள பேராயர், "எங்கள் தேசத்தின் சில பகுதிகளை விற்பதன் மூலம், இலங்கை ஏனைய நாடுகளுக்கு பணிந்து வருகிறது. அதிகாரிகள் பல்வேறு முட்டாள்தனமான முடிவுகளை எடுத்து நாட்டை அழிவை நோக்கி இட்டுச் செல்கின்றனர். சுதந்திரத்தைப் பெற்ற நாம் இப்போது சுதந்திரத்தை இழக்க வேண்டியுள்ளது". ராகம, தேவத்தையில் உள்ள தேசிய பசிலிக்கா தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பேராயர் இதனைத் தெரிவித்துள்ளார்.

14 தங்க பிஸ்கட்களுடன்....

அது தொடர்பில் நேற்று தகவல் வெளியிட்ட சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரான சுங்கப் பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவிக்கையில், அந்த தங்க பிஸ்கட்களின் எடை 1.314 கிலோ கிராம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் விமான நிலையத்திலிருந்து மேற்படி தங்க பிஸ்கட்களை வெளியில் கொண்டுசெல்ல முனைந்த போது, சுங்க அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் அது கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுங்கத்தினூடாக வெளிக்கொண்டு செல்லப்படும் அனைத்து பயணிகள் பொதிகளும் உயர்மட்ட தொழில்நுட்ப கருவிகள் மூலம் சோதனைக்குட்படுத்தப்படும். சுங்கத் திணைக்களம் அந்த தொடர்ச்சியாக அந்த சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

வாய்மூல விடைக்கான....

ரணில் விக்கிரமசிங்கவிடமும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரம் ஒரு மணித்தியாலமாக வழங்கப்பட்டுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட எதிர்த்தரப்பினர் அந்த நேரத்தை வீணடித்து வருகின்றனர் என்றும் அவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

அமைச்சரவை கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதியின் பாராளுமன்ற விவகார ஆலோசகர் பேராசிரியர் ஆசுமாரசிங்கவின் தலைமையில் சென்று ஆளும்கட்சி பின்வரிசை எம்.பிக்கள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தில், எதிர்த்தரப்பினர் அனாவசியமான கேள்விகளை எழுப்பி காலத்தை வீணடிப்பதுடன் உரிய காலத்திற்கு மேலதிகமாக காலத்தை வீண்விரயம் செய்வதாகவும் அதனால் ஆளும் தரப்பு நாட்டு மக்களுக்காக சமர்ப்பிக்கும் சட்டங்கள் மற்றும் கட்டளைகளை சமர்ப்பிக்க முடியாதநிலை காணப்படுவதாகவும் அவர்கள் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியுள்ளனர். அதனால் பின்வரிசை எம்.பிக்களுக்கு விவாதங்களில் உரையாற்றுவதற்கும் சந்தர்ப்பம் இழக்கப்படுவதாகவும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். அந்தவகையில் பாராளுமன்ற அமர்வொன்றுக்காக நாளாந்தம் செலவிடப்படும் 40 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நிதி விரயமாவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தொலைக்காட்சிகளில் தம்மை காட்டுவதற்காக இவ்வாறு செயற்படுவதாகவும் அவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரச வாகனங்கள்...

நிறுவனங்களில் உள்ள வாகனங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள நிதியமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த நிறுவனங்களில் உள்ள வாகனங்கள் குறித்த தகவல்களை எளிய தொழில்நுட்ப செயல்முறை மூலம் திறைசேரி பெற்றுக்கொள்ளும் வகையில், இதற்காக புதிய கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளில் சகல வாகனங்கள் தொடர்பான தகவல்களையும் உள்ளிடுமாறு அமைச்சு முன்னதாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு முன்னதாக கடந்த 2015 ஆம் ஆண்டு இத்தகைய கணக்கெடுப்பை நடத்தியது. பயன்படுத்தக்கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத வாகனங்களின் எண்ணிக்கையை துல்லியமாக மதிப்பிடுவதே இந்த கணக்கெடுப்பின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில், அரசு நிறுவனங்களில் சுமார் 80 ஆயிரம் வாகனங்கள் உள்ளதாக கண்டறியப்பட்டது. இந்த முறை மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான வாகனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு சொந்தமான வாகனங்கள் பற்றிய தகவல்கள் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு சேகரிக்கப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

பொதுமக்கள்....

வெளியிட்டுள்ள மத்திய வங்கி, கஷ்டப்பட்டு மக்கள் சம்பாதிக்கும் பணம் அவர்களினால் இழக்கப்படுவதற்கு இடமுள்ளதாகவும் இவ்வாறான மோசடிகள் தொடர்பில் தொடர்ச்சியான அவதானத்துடன் செயற்படவேண்டுமென்று மத்திய வங்கி பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. அதுதொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தல் அவசியமெனில் Cbslgen@cbsl.lk என்ற ஈமெயில் முகவரியுடன் தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியுமென்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அது மட்டுமன்றி சில மோசடிக்காரர்கள் அவர்களின் பிரசார செயற்பாடுகளை முன்னெடுக்கும் விதம்தொடர்பிலும் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டுமென மக்கள் வங்கி கேட்டுக்கொண்டுள்ளது.

மாரடைப்பு....

பல்வேறு நோய்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட பல குழுக்களில் அங்கம் வகிக்கும் இலங்கை மருத்துவ சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணரான ஆனந்த விஜேவிக்ரம, அந்த தடுப்பூசிகளைப் பெற்றவர்களுக்கு பல்வேறு சிக்கல்களின் சாத்தியம் மிகக் குறைவு என தெரிவித்துள்ளார். அந்த தடுப்பூசிகளை பெறாதவர்கள் மாரடைப்பு உள்ளிட்ட பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கொவிட் தடுப்பூசி பெற்றவர்களுக்கு மாரடைப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படுவது மிகவும் குறைவு. தடுப்பூசி பெறாமல் கொவிட் தொற்றுக்குள்ளானவர்களுக்கே இவ்வாறான பாதிப்புகள் அதிகமாக உள்ளது. தடுப்பூசியால் நன்மையே தவிர எவ்வித தீமையும் இல்லை. இந்நாட்டில் தடுப்பூசிகளுக்கு எதிரான ஒரு குழுவினர் பொய்ப் பிரசாரங்களை செய்து வருகின்றனர். அவர்கள் கொவிட் தடுப்பூசி மாத்திரமின்றி அனைத்து தடுப்பூசிகளுக்கும் எதிராக பிரச்சாரம் செய்து வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, புகைபிடித்தல், உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மை மற்றும் மனஅழுத்தம் ஆகியனவே இதயநோய்களுக்கு பிரதான காரணமாக அமைவதாக களுத்துறை பொது வைத்தியசாலையின் இருதயநோய் நிபுணரான வைத்தியர் பத்திய ரணசிங்க தெரிவித்துள்ளார். மன அழுத்தம் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்களுக்குக்கூட மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முறைப்பாடு....

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் வெளியிட்ட அறிக்கையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குருந்தூர் மலையை அடிப்படையாகவைத்து உருவாகும் குழப்பநிலைக்கு காரணமான நபரை புலனாய்வு பிரிவினர் அடையாளம் கண்டுள்ளனர் எனதெரிவித்தார்.

இது குறித்து கேள்வி எழுப்பியவேளை இது தொடர்பில் எந்த முறைப்பாடும் முன்வைக்கப்படவில்லை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முறைப்பாடுகள் அவசியம். முறைப்பாடுகள் இல்லாமல் விசாரணைகளை முன்னெடுக்கவோ கைதுசெய்யவோ முடியாது. எனினும் குருந்தூர் மலையை சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்ற சிறிய சம்பவங்கள் குறித்து அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தில்....

இலங்கையை குறிப்பிட முடியுமென ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் என்ரூ ப்ரன்சே தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் ஏனைய நாடுகள் இலங்கையை முன்னுதாரணமாகக் கொள்ளமுடியும் என்பதே ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்செயலாளரின் கருத்தாகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீதி மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜய தாச ராஜபக்ஷவுக்கும் ஐ.நா. பிரதிநிதிக்குமிடையில் சந்திப்பொன்று நேற்று நீதியமைச்சில் இடம்பெற்றுள்ளது. இதன்போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி சந்திப்பின்போது புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தி சட்டத்தின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்துதல் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள், புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள், ஊழல் எதிர்ப்பு சட்டம், மனித உரிமையை பாதுகாப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பிலும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி, கொவிட் பரவல் பாதிப்பு மற்றும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் ஆகியவை காரணமாக வெகுவாக வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதார நிலை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் ஒரு வருட காலத்திற்குள் இயல்புநிலைக்குக் கொண்டுவர முடிந்துள்ளமை தொடர்பில் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இதன்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் ஐக்கியநாடுகள் அமைப்பின் மேற்படி பிரதிநிதி நீதியமைச்சருடன் கலந்துரையாடியுள்ளதுடன் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்திற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அந்த சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதுடன் அதற்கான பாராளுமன்றத்தின் அனுமதியை விரைவில் பெற்றுக்கொள்ளமுடியுமென்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

8 இலட்சம்....

வருடத்திற்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்களை விரைவில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக இனங்காணப்பட்டுள்ள 15 இலட்சம் குடும்பங்களில் 8 இலட்சம் குடும்பங்களுக்கு நேற்று முதல் கொடுப்பனவு வழங்கப்படுவதுடன் அவர்களுக்கான கொடுப்பனவு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்றும் இன்றோ அல்லது நாளைய தினமோ பயனாளிகள் அதனைப் பெற்றுக் கொள்ளமுடியுமென்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்தக் கொடுப்பனவு ஜூலை மாதத்திற்கானது என்றும் தவறான தகவல்களை வழங்கி இந்தக்கொடுப்பனவை எவராவது பெற்றுக் கொள்வார்களானால் அவர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென்றும், அத்துடன் அவர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை மீண்டும் அரசாங்கம் அறவிட நேரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் மூலம் குறைந்தவருமானம் பெறும் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான 10 இலட்சம் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 1,20,000 ஆட்சேபனைகளும் கோவைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளன. ஆட்சேபனைகள் தொடர்பில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான நடவடிக்கைகள் நிறைவுபெற்றதும் அதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இந்த கொடுப்பனவுக்கான விண்ணப்பங்களில் சில சிக்கல்கள் காணப்பட்டன. ஒரே அடையாள அட்டை இலக்கத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று வங்கிக் கணக்குகளில் சிக்கல், வங்கி கிளைகளின் இலக்கம் குறிப்பிடப்படாமை போன்ற குறைபாடுகள் அவற்றில் காணப்பட்டன.

நீச்சல் தடாகத்தில்....

மீட்டு முதலுதவிகளை வழங்கி பல்கலைக்கழக அம்பியூலன்ஸ் மூலம் மிஹிந்தலை பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்தனர். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதாள குழு...

அதே வேளை, பொலிஸ் திணைக்களம் தற்போது அரசியல் தலையீடற்ற நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது என்றும், அதற்க மைய நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் விளக்கம ளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், பொலிஸ் அதிகாரிகளின் நியமனங்களின்போது அரசியல் தலையீடுகள் இடம்பெறுவதைத் தடுத்துள்ளதுடன் கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த பொலிஸாரின் பல நலன்புரி சேவைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது இணையவழி ஊடாக கடவுச் சீட்டுகளை வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருமலை பெரிய

மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் மறுக்கப்பட்டுள்ளது.

மேற்படி விகாரையை அமைப்பதால் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பில் ஆளுநரால் பௌத்த மத தேரர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன் அந்த விகாரை நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட கடிதத்தை மீளப் பெற்றுக் கொண்டாலும் பிரதேச சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டுமானப் பணிகளையும் முன்னெடுக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டமானது அனைத்து இன மக்களும் ஒற்றுமையுடன் வாழும் ஒரு பிரதேசமாகும். அந்த வகையில் பௌத்த பிக்குகளின் செயல்பாடுகள் போன்று ஏனைய இனத்தவர்களும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பார்களானால் பௌத்த பிக்குகளே அதற்கு முன்னுதாரணமா வார்கள் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

திருகோணமலை, நிலாவெளி,பெரியகுளம் பகுதியில் விகாரையொன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரி நேற்றைய தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு முன்பாக பௌத்த மத தேரர்களால் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

அதனையடுத்து மேற்படி விகாரை நிர்மாணிக்கப்படுவதால் ஏற்படும் பிரச்சனைகள் தொடர்பில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட பௌத்த மத தேரர்களுக்கு மாவட்ட செயலகத்தில் வைத்து ஆளுநரால் விளக்கமளிக்கப்பட்டது.

அதே வேளை, பிரதேச செயலகத்தில் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆர்ப்பாட்டக்காரர்களால் அந்த கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தினகரன், வாரமஞ்சரி அனுசரணையில்

சங்கவி பிலிம்ஸ் லிமிட்டட்டின் கலாவிபூஷணம் விருது வழங்கல்

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் பிரைவட் லிமிட்டட்டும் மன்னார், பேசாலை, சங்கவி தியேட்டரும் வருடாந்தம் கலாவிபூஷணம் விருதுகளை வழங்கி வருகிறது. இவ்வாறு கலாவிபூஷணம் வழங்கும் விழா வொன்று நாளை 30ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்து லாம்பு சந்தியிலுள்ள கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது மூன்று கலைஞர்களுக்கு கலாவிபூஷணம் விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக சங்கவி பிலிம்ஸ் பிரைவட் லிமிட்டட்டின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை, சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் தெரிவித்தார்.

இலக்கியத் துறைக்கு ஆற்றிவரும் பணிக்காக திருகோணமலை எம்.எம். தௌபீக்கும் அலங்காரம், அழகுக் கலை ஆகிய துறைகளுக்கு ஆற்றிவரும் பணிக்காக அம்பாறை எஸ். எல். எப். நுஸ்காவுக்கும் தொலைத்தொடர்புக்கு ஆற்றி வரும் பணிக்காக ஏ.எல்.எம். இஸ்மத்துக்கும் இங்கு கலாவிபூஷணம் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

உத்தியோகபூர்வ இல்லத்தில் பலாத்காரமாக தங்கியிருந்த

முன்னாள் அமைச்சர் சன்ன ஜயசுமனவை வெளியேற்ற நீதிமன்றம் நேற்று உத்தரவு

லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லத்தில் பலாத்காரமாக தங்கியுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவை அங்கிருந்து வெளியேற்றுமாறு கொழும்பு மேலதிக மதி மாஜிஸ்திரேட் நீதவான் மஞ்சுள ரத்நாயக்க நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு தொடர்பில் கவனத்திற் கொண்டுள்ள நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார். பிரதிவாதியான சன்ன ஜயசுமன அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய பின்னரும் உத்தியோகபூர்வ இல்லத்தில் தங்கியிருப்பதாகக் குறிப்பிட்டு அவரை அங்கிருந்து வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி அந்த வழக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கோடு சம்பந்தப்பட்ட விடயங்கள் நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து முன்னாள் அமைச்சரை அந்த உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றுமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தெல்லிப்பளை...

(28) இடம்பெற்றது. அதிகாலை தேர்த் திருவிழாவுக்கான கிரியைகள் ஆரம்பமாகி காலை 7.30 மணியளவில் வசந்தமண்டபப் பூசை ஆரம்பமானது. வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து துர்க்கையம்மன் சித்திரத் தேரில் எழுந்தருளினார்.

வெல்லம்பிட்டியவில்...

முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை வெல்லம்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நாட்டில் நல்ல மாற்றத்தை... (03 ஆம் பக்கத் தொடர்)

மார்ட்டின் லூதர் கிங் ; புத்திசாலித்தனமும் பண்புமே உண்மையான கல்வியின் குறிக்கோள் என்று கூறினார். இந் நிறுவனத்தில் நீங்கள் பெறும் கல்வி மற்றும் வழிகாட்டல்கள், இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்ள இன்றியமையாததாகும். நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய உந்து சக்தி படித்த இளைஞர்கள்தான். பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அமைச்சர் என்ற வகையில் எங்களின் பொறுப்புகள் மற்றும் இலட்சியங்களை நான் புரிந்து கொண்டுள்ளேன். அனைவருக்கும் கல்வி, புதுமை மற்றும் சமவாய்ப்புகளை ஊக்குவிக்கும் கொள்கைகளை உருவாக்குவது நமது கடமையாகும்.

நாலாம் மாடியிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

நிலையில் நான்காம் மாடியில் ஜன்னலைத்திறந்து கீழே குதித்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடு கிடைக்காதவர்களுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

67லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியும் மேலும் 8 பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக கடந்த வருடத்தில் 48 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதியும் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளதாக அந்த அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் வீடுகள் கிடைக்காத பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மாதாந்தம் 75 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில், வீடுகள் இல்லாத காரணத்தினால் மாதிவெல வீட்டுத்தொகுதியில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வீடுகள் வழங்க முடியாமல் போயுள்ளது.

பிரதான சந்தேக நபரின்... (03 ஆம் பக்கத் தொடர்)

கடந்த மாதம் 23 ஆம் திகதி வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலை சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள பிரதான சந்தேக நபரின் மீதே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் வசித்து வரும் தவசிகுளம் பகுதியில் வைத்து இத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவத்தில் பிரதான சந்தேக நபரின் சகோதரரான 37 வயதுடைய நபர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முற்றிலும் வரண்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து முக்கிய நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் 35 – 40 அடி வரை குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க வற்றிப்போயுள்ள குளங்களை பெரும் போக பயிர்ச்செய்கைக்கு

முன்பதாக புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமைச்சர், கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டிற்கு அமைய அந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

சிறுவர், வயதானோர்,... (03 ஆம் பக்கத் தொடர்)

மட்டக்களப்பு, அம்பாறை, வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலன்னறுவை, ஊவா மாகாணத்தில் பதுளை, மொனராகலை மாவட்டத்தில் நேற்றைய தினம் உஷ்ண நிலை 39 – 45க்கு கிடைப்பட்ட செல்ஸியசில் காணப்பட்டதாக அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது. கடும் உஷ்ணத்தை கவனத்திற்கொண்டு பொதுமக்கள் அதிகளவு தண்ணீரை அருந்தவேண்டுமென்றும் முடிந்தளவு நிழல் காணப்படும் இடங்களில் தரித்திருக்குமாறும் அந்தத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதிகாரிகள் 23 பேருக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் சாதாரண வேலை நாட்களும் விடுமுறை தினமாக கணிக்கப்பட்டு கடமைக்கு சமுகமளிக்கும் நாட்களுக்கு ஒன்றரை வீதமான கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் 2020ஆம் ஆண்டு 1,78,43781 ரூபா மற்றும் 2021ஆம் ஆண்டில் 4,42,73092 ரூபா என 62116873 ரூபா நிதி திறைசேரியின் அனுமதியின்றி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட 22 அதிகாரிகளுக்கு 9 லட்சத்துக்கும் அதிகமான நிதி 2021ஆம் ஆண்டு எந்தவித அனுமதியுமின்றி வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவு 415 விடுமுறைத் தினங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏழைகளுக்காக தம் வாழ்வை அர்ப்பணித்த கண்கண்ட தெய்வம் அன்னை புனித தெரேசா

பலகோடி மனிதர்கள் தோன்றி மறைந் திருந்தாலும் ஒரு சிலரை மட்டும் வரலாறு இன்றும் நினைவில் வைத்திருக்கின்றது. பெரும்பாலானோர் வாழ்ந்து மறைக்கின்ற னர் ஒரு சிலர்தான் மறைந்தும் வாழ்கின்ற னர்.

அன்பு, இரக்கம், கருணை அத்தனைக் கும் இலக்கணமாக வாழ்ந்தவர். இன்றும் கோடிக்கணக்கான உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர் "அன்னை தெரசா.

இந்த உலகை மாற்ற நமக்கு அதிகம் தேவைப்படுவது பணமோ தொழில்நுட் பமோ, இராணுவ பலமோ, விஞ்ஞான அதி சயமோ அல்ல

அன்பும் நேசமும் பாசமும் கருணையும் தான் என இத்தனைக்கும் ஒட்டுமொத்த இலக்கணமாக வாழ்ந்து கோடிக்கணக்கான உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்பின் ஒட்டுமொத்த உருவம் அன்னை தெரேசா ஆவார்.

இவரது வாழ்க்கை உலகில் பலபேருக்கு முன்னுதாரணமாகும். அநாதைகளுக்கும் ஆதரவற்றவர்களுக்கும் தாயாக இருந்து தனது வாழ்வை மகாஉன்னதமாக மாற்றிய வர் அவர்.

இவர் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் திகதி யூகோஸ்லாவியா நாட்டில் "அக்கினீஸ்" என்ற பெயருடன் பிறந்தார். பிற்காலத்தில் குழந்தைகளின் அன்பின் முகவரியாக விளங்குவார் என்பதை அன்று எவருமே அறியவில்லை.

இவர் ரோமன் கத்தோலிக்க ஆலயத்தில் கன்னியாஸ்திரியாக சகோதரி "தெரேசா" என்று இவர் பெயர்மாற்றி கொண்டார்.

1929 இல் இவர் தனது 19 ஆவது வயதில் இந்தியாவின் கல்கத்தாவிற்கு புறப்பட்டார். சு மார் 68 ஆண்டுகள் சமூக சேவையாற்றி னார்.17 ஆண்டுகளாக இவர் கல்வி கற்பிக் கும் பணியில் ஈடுபட்டார்.

1950 ஆம் ஆண்டு "மிசனரி ஆப் சாரிட்டி" என்ற அமைப்பினை உருவாக்கி ஆதர வற்ற மக்களுக்கு உதவிக்கரம் நீட்டினார். 1952 இல் "நிர்மல் றீடி" என்ற இல்லத்தை திறந்தார். இதுவே பல ஆதரவற்றோரை பராமரிக்கும் கருணை இல்லமாக தொழிற் பட்டது. 48000 ஆதரவற்ற மக்கள் இந்த இல்லத்தில் வைத்து பராமரிக்கப்பட்டனர்.

சக மனிதர்களாலேயே புறக்கணிக்கப் பட்ட ஆன்மாக்களுக்கு அடைக்கலம் தந்த வர் அவர்.

அவரது வாழ்வில் அவர் ஒருமுறை ஒரு செல்வந்தரிடம் தனது சேவைக்காக உதவி கேட்க சென்றிருந்தார் அப்போது அந்த செல்வந்தர் அன்னை தெரேசாவின் கைகளில் காறி உமிழ்ந்தாராம். கைக்குள் விழுந்த எச்சிலை கைக்குள் மூடிக்கொண்டு எனக்கு இந்த எச்சில் போதும் என் ஏழை களுக்கு ஏதாவது கொடுங்கள் என்றார். இதனை கண்டு மனம் கலங்கிய செல்வந் தர் அன்னையின் கால்களில் விழுந்து மன் னிப்புக் கேட்டாராம்.இவ்வாறு பிற உயிர் களுக்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த மிகச்சிறந்த பெண்மணியாவார். 1933 இல் அன்னை இல்லத்தையும் 1957 இல் தொழு நோயாழிகளுக்கான ஒரு இல்லத்தையும் உருவாக்கினார்.பலரும் வெறுத்து ஒதுக்கிய தொழுநோயாளர்களுக்கு அன்பையும் ஆதர வையும் இவர் வழங்கினார். 12 கன்னியாஸ் திரிகளோடு ஆரம்பித்த இவரது "மிசனரி ஆப் சாரிட்டி" அமைப்பு இப்போது 500 க்கு மேற்பட்ட நிலையங்களுடன் 131 நாடு களில் இயங்கி வருகிறது.

இவர் வாழும் காலத்தில் இவருக்கென இருந்த சொத்துக்களாக 3 வெள்ளை சேலை களும் ஒரு சிலுவை ஜெபமாலையும் மட்டும் தான்.

ஆனால் விலை மதிப்பற்ற அன்பை ஏழைகளுக்கு வழங்கி சென்றவர். "அன் பிற்கு அன்னை தெரேசா" என்று சொல்லும் அளவிற்கு அன்பினால் இவ்வுலகம் தளைக் கும் என்ற உண்மையை சொல்லி சென்றவர் அவர்..

அருளாளரான அன்னை தெரேசாவை இரண்டாம் அற்புதமாக அங்கீகரித்து 2016 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் திகதி அவ ருக்கு புனிதர் பட்டம் வழங்கப்படது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவருக்கான புனிதர் பட்டத்தை வழங்கினார்.

யூகோஸ்லாவியா நாட்டில் ஸ்கோப்ஜி என்ற சிறு கிராமத்தில் ஓர் எளிய குடும்பத் தில் பிறந்தவர் தெரேசா. 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 ஆம் திகதி பிறந்த இவர், இளம் வயதிலேயே தந்தையை இழந்தவர்.

1929 இல் இந்தியா சென்று லொரேற்றா மடத்தின் கல்கத்தா கிளையில் இருந்து கொண்டு பள்ளிக்கூடமொன்றில் ஆசிரி யையாகப் பணியாற்றினார். ஆதரவற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் வழங்கி யவர் அவர்.தொழு நோயாளிகளுக்காக 'ப்ரேம் நிவாஸ்' எனும் பெயரில் பராமரிப்பு இல்லம் தொடங்கினார்.

1962 இல் பத்மஸ்ரீ விருது, 1962 இல் பிலிப்பைன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான 'ராமோன் மக்ஸேஸே' விருது, 1971 இல் பாப்பாண்டவரின் உலக சமாதா னப் பரிசு, அமெரிக்காவின் 'நல்ல சாமரி யன்' விருது, 1972 இல் சர்வதேச நேரு சமா தானப் பரிசு, 1976 இல் சாந்தி நிகேதனவில் டாக்டர் பட்டம் அவர் பெற்றுக் கொண்ட சிறப்பு பட்டங்கள் விருதுகளாகும்.

இந்திய மத்திய அரசு அன்னை தெரே சாவிற்கு 1980 இல் 'பாரத ரத்னா' விருது வழங்கிக் கௌரவித்தது. அன்னை தெரேசா வின் பணியைப் போற்றும் விதமாய் உலக அமைதிக்கான நோபல் பரிசும் (1979) வழங் கப்பட்டது. இவை அன்னை பெற்ற விருது களில் குறிப்பிடத்தக்கவை.

வாழ்நாள் முழுவதையும் மற்றவர்களின் நலனுக்காகவே செலவிட்ட அன்னை 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

அன்னை ஏழை, எளிய மக்கள் மீது காட்டிய கருணை, இரக்கம் அன்புக்காக வும் கடவுளோடு நெருங்கிய தொடர்பு கொண்டு தமது பிரார்த்தனையின் மூலம் அவரின் ஆசீர்வாதங்களை மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததாலும் கத்தோலிக்கத்

திருச்சபை அவரை கௌரவித்து புனிதர் பட்டம் வழங்கியது. அன்னையின் பெயரால் உலகெங்கிலும் இன்றும் அற் புதங்கள் நடந்து வருகின்றன. இலங்கை யிலும் அன்னைக்கு முதலாவது ஆலயம் தல்கஸ்வெலயில் உருவாக்கப்பட்டு வரு டாந்தம் திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றது..

ஏழைகளினதும் நோயாளர்களினதும் கைவிடப்பட்ட சிறுவர்களினதும் கண் கண்ட தெய்வமாக வாழ்ந்து இறைபத மடைந்த அன்னை தெரேசா நமது காலத் தில் நம் கண் முன் வாழ்ந்துள்ளார்.

பிறருக்காக தன்னை அர்ப்பணித்து வாழ்வது எப்படி என்ற பாடத்தை உல கிற்கு கற்பித்த அவர் என்றும் நம் மனங்க ளில் வாழ்வார் என்பது நாம் அனைவரும் அனைவரும் பெருமை கொள்ள வேண்டிய விடயம்.

- ஏ.டி.ஷான்-

மட்டக்களப்பு ஆயித்தியமலை சதா சகாய மாதா ஆலய கொடியேற்றம்

மட்டக்களப்பு ஆயித்தியமலை சதாசகாய மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது பங்குத்தந்தை அருட்பணி ஈ.ஜேமில்ட்டன் தலைமையில் இடம்பெற்ற அந்த நிகழ்வில் திருப்பலியினை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் ஒப்புக்கொடுத்தார் திருவிழா செப்டம்பர் 03 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் திருவிழா கூட்டுத் திருப்பலியினை திருத்தந்தையின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்கப் பிரதிநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை மற்றும் மறை மாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் தலைமையில் அருட்தந்தையர்கள் இணைந்து ஒப்புக்கொடுக்கப்படவுள்ளனர்.

படங்கள்: கல்லடி குறூப் நிருபர் உதயகாந்த்

நமக்குள் உள்ள ஒரு விலை உயர்ந்த கருவூலம்

ஸ்கொட்லாந்து நாட்டில் வயதான பெண்ணொருவர் வாழ்ந்து வந்தார். அவரு டைய மகன் அமெரிக்கா வில் பெரிய செல்வந்தனாக வாழ்ந்து வந்தான்.

ஆனால் அந்த வயதான பெண்ணோ வறுமையில் வாடினார்.

ஒருநாள் பக்கத்து வீட்டுப் பெண் அந்த ஏழைப் பெண்ணைப் பார்த்து பாட்டி நீ இங்கு இப்படி வறுமை யில் வாடுவது தெரிந்தால் உன் மகன் உனக்கு நிச்ச யமாக உதவி செய்வார் என்றாள். அதற்கு அந்தப் பாட்டி, என் மகனுக்கு என்ன செலவோ! பணம் அனுப்புவ தில்லை! ஆனால் வாரம் தவறினாலும் அவன் அன்போடு எழுதும் கடிதம் மட்டும் எனக்கு வரத் தவறாது.

கடிதத்தோடு ஓர் அழகான படமும் வரும். அந்தப் படங்களையெல்லாம் சேர்த்து வைத் திருக்கின்றேன். அவை அழகாக இருக்கின் றன என்றார். அந்தப் பாட்டியோ பைபிளை எடுத்து அந்தப் பெண்ணிடம் கொடுத்து இதற் குள்தான் எல்லா படங்களும் இருக்கின்றன என்றார். அடுத்த வீட்டுப் பெண் பைபிளைத் திறந்தாள். அதற்குள் இருந்ததெல்லாம் படங் கள் அல்ல பணம், அமெரிக்கடொலர் நோட் டுக்கள்.

பாவம் அந்த வயதான பெண். அவளிடம் விலை உயர்ந்த கருவூலம் இருந்தும் அவள் ஏழையாக வாழ்ந்து கொண்டிருந்தாள் !

நம் நடுவே, நமக்குள்ளே ஒரு விலை உயர்ந்த கருவூலம் உண்டு. அந்தக் கருவூலத் தின் பெயர் இயேசு. அவருடைய அருமையை யும், பெருமையையும் நாம் உணர்ந்து அவரை நற்செய்தியில் நாம் சந்திக்கும் பேதுருவைப் போல மெசியாவாக, கடவுளின் மகனாக (மத் 16:16) ஏற்று வாழ்கின்றோமா?

மூன்று ஆண்டுகளாகத் தன்னோடு இருந்து, உண்டு, உறங்கி சென்ற இடமெல் லாம் பின்தொடர்ந்து, தான் செய்த வல்ல செயல்களையெல்லாம் கண்ணாரக் கண்ட தன் சீடர்களை நோக்கி, இயேசு ஒரு கேள்வி எழுப்புகிறார்.

மனுமகனை மக்கள் யார் என்று சொல்லுகி றார்கள்? நீங்கள் என்னை யாரென்று சொல்லு கிறீர்கள் (மத். 16:1415) என்றும் கேட்கிறார்.

ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறார் ? இது வரைப் பின்தொடர்ந்த மக்கள் பலர் இயேசு வில் விசுவாசமிழந்தனர்.

உற்றார், உறவினர் அவர்மேல் இடறல் பட் டனர். சீடர் பலர் இயேசு தன் உடலை உண வாகத் தருவேன் என்றவு டனும் நெருக்கடி நிலை ஏற்பட்டவுடனும் அவரை விட்டுப் பிரிந்து சென்றனர்.

இந்த சூழலில் தந்தையா கிய இறைவன் இவ்வுல கிற்கு இயேசுவை எதற்காக அனுப்பினார் என்பதை மக்கள் புரிந்துகொண்ட னரா , அந்தப் பணியை இந்தச் சீடர்கள் தொடர்ந்து செய்வார்களா? தன்னோடு மூன்று ஆண்டுகள் இருந்து பயிற்சி பெற்ற சீடர்கள் தன்னைப் புரிந்துகொண் டார்களா என்பதை அறிய , ஒரு நேர்முகத் தேர்வு நடத் துகிறார் இயேசு.

ஏனெனில் கடந்த ஞாயிறு இரண்டாம் வாசகத்தில் (உரோ. 11:33) கடவுளின் அருட்செல்வம் ஞானம், அறிவு, தீர்ப்புகள் இவற்றை மனிதன் தன் அறி வினால் அறிய இயலாது. அனைத்தும் அவ ரிடமிருந்தே, அவருக்காகவே இருக்கின்றன என்கிறார் புனித பவுல் அடிகளார்

இயேசுவைக் கடவுளாக நாம் ஏற்றுக்கொண் டால், நமக்குள் கடவுளின் மிகுதியான அருள், செல்வம், அவருடைய ஆழமான ஞானம், அறிவு, அறிவுக்கு எட்டாத அவருடைய தீர்ப்பு கள், ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட அவருடைய செயல்முறைகள் அனைத்தும் குடிகொள் ளும்.

அப்பொழுது நமக்குள்ளும், நம் நடுவி லும் புதிய யுகம் ஒன்று பிறக்கும். நாம் வாழ்வின் திறவுகோலை கையிலேந்தி வலம் வருவோம்.

-அருட்பணி இருதயராஜ்

வாழ்க்கைப் பாதையில் நம் அருகிலிருக்கும் உயிருள்ள கடவுள் இயேசு கிறிஸ்து

– திருத்தந்தை பிரான்சிஸ்

இயேசு ஒரு சிறந்த ஆசிரியர். நி யா ய மா ன வ ர் , இ ண க் க மா ன வ ர் , துணிவுள்ளவர், வர லாற்றின் நாயகன், இ ற ை வ ா க் கி ன ர் என்பது மட்டுமன்றி எ ல் ல ா வ ற் றி ற் கு ம் மேலாக நம் வாழ்க் கைப் பயணத்தில் நம் அருகில் இருக் கும் உயிருள்ள கடவுள் இயேசு என திருத்தந்தை பிரான் சிஸ் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற் றுக்கிழமை பொதுக் காலத்தின் 21ஆம் ஞாயிறு நற்செய்தி வாசகமான மத்தேயு நற்செய்தி 16ஆம் அதிகாரம் 13 முதல் 20 வரையுள்ள இறைவார்த்தைகளான இயேசுவைப் பற்றிய பேதுருவின் அறிக்கை குறித்து மூவேளை செபஉரையின் போது தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகள் மத்தியில் இவ்வாறு எடுத்துரைத்தார் திருத்தந்தை.

கிறிஸ்து கடந்த காலத்தின் நினைவு அல்ல, மாறாக நிகழ்காலத்தின் கடவுள் என்று வலியுறுத்திய திருத்தந்தை, இயேசு உயிருடன் இருக்கிறார், நம்மு டன் இருக்கிறார், அவர் நம் பக்கத்தில் இருக்கிறார், அவருடைய வார்த்தையை யும் அவருடைய அருளையும் நமக்குத் தருகிறார், அது நம்மை ஒளிரச் செய்து, மீட்டெடுக்கிறது என்றும் குறிப்பிட்டார்.

வாழ்க்கைப் பாதையில் நாம் தனியாக இல்லை, கடவுளின் உயிருள்ள மகனாம் கிறிஸ்து நம்முடன் இருக்கிறார் என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, கிறிஸ்தவ வாழ்க்கைப் பயணம் கடினமாகவும், உயரமாகவும் மிகவும் செங்குத்தாக வும் தோன்றும் போது நாம் சோர் வடைய கூடாது என்றும், நம் பலவீ னங்களை ஏற்று, மு ய ற் சி க ளை ப் பகிர்ந்துகொண்டு, நமது தோள்களில் உறுதியான மற்றும் மென் மை ய ான அவரது கரத்தை வைத்து இயேசு நம் முடன் நடக்கின்றார் என்றும் அவர் குறிப் பிட்டார் கூறினார்.

இயேசு நம் அருகில் இருப்பதால் நாம் அவரது துணையுடன் நமது நம்பிக்கையைப் புதுப்பிப்போம் என்றும், இயேசு உண் மையில் என் வாழ்க்கையில் உயிருடன் இருக்கிறாரா? இக்கட்டான சமயங்களில் நான் அவரைச் சார்ந்திருக்கிறேனா? அவருடைய இருப்பை அதிகரித்துக் கொள்கிறேனா? நாம் வாழும் சமூகத் தில் சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து அவரால் வழிநடத்தப்படுவதை நான் அனுமதிக்கிறேனா? என்பன போன்ற கேள்விகளால் நமது வாழ்வை சரி செய்து கொள்ளவும் அழைப்பு விடுத் தார் திருத்தந்தை.

வாழ்க்கைப் பாதையில் நாம் தனியாக இல்லை. மாறாக கடவுளின் மகனாம் கிறிஸ்து நம்முடன் இருக்கிறார்

- மெரினா ராஜ்

கிழக்கின் குரல்

கல்முனை சுகாதார சேவைகள் பிரிவில்,

சின்னமுத்து நோயை தடுக்க தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் சின்னமுத்து மற்றும் ஜெர்மன் சின்னமுத்து நோய் பரவலை தடுப்பதற்கான, தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது அதிக வெப்பம் நிலவுதால் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் சின்னமுத்து மற்றும் ஜெர்மன் சின்னமுத்து நோய் பரவக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந் நோயினால் சிறுவர்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் நாட்பட்ட நோயாளிகள் ஆகியோர் பாதிக்கப்படுவார்கள் என தெரிவித்தார்.

தற்போது கொழும்பை அண்டிய பகுதிகளில் தடுப்பூசிகளை பெறாத வர்கள் இவ்வாறான நோய்ப்பரவல் ஏற்படுவதாக அறிய கிடைக்கப்பெற்றதையடுத்து, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

குழந்தைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படுவதால் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமெனவும், தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்காக மத நிறுவனங்களின் பங்களிப்பை பெறுவதற்கான பொறி முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மத நிறுவனங்களின் பங்களிப்பை பெற்று மத நிறுவனங்களின் ஊடாக தொற்று நோய்கள் மற்றும் தடுப்பூசிகள் தொடர்பிலான விழிப்புணர்வினை வழங்கி, பிராந்தியத்தில் இவ்வாறான நோய்கள் ஏற்படுவதையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் இழப்புக்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அகஷி மீடியா ஏற்பாடு செய்த Top 100 இலங்கையர் என்ற விருது விழா கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது, இலங்கையின் மூத்த ஊடகவியலாளர்களில் தேசிய சாகித்திய மண்டல விருது பெற்ற ரீ.எல்.ஜவ்பர் கான், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர், இந்திய நாட்டின் இனிய நந்தவனம் சஞ்சிகை பிரதம ஆசிரியர் சந்திரசேகரன் ஆகியோரால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டபோது.

நாளை ஏறாவூரில் மழை வேண்டி தொழுகை

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஏறாவூரில் மழை வேண்டி தொழுகை நடாத்த அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் ஏறாவூர் கிளை தீர்மானித்துள்ளது.

ஸலாதுல் இஸ்திஸ்கா எனப்படும் மழை வேண்டி தொழும் தொழுகையை நாளை 30 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.20 மணிக்கு அலிகார் விளையாட்டு மைதானத்தில் நடாத்த அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமாவின் ஏறாவூர் கிளை தீர்மானித்துள்ளது.

தற்போது நிலவி வரும் கடுமையான வரட்சி காரணமாக மனிதர்கள் உட்பட ஏனைய உயிரினங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறான சிரமமான நேரங்களில் அல்லாஹ்வின் அருளை வேண்டி பிரார்த்திப்பதும், நோன்பு நோற்று மழை வேண்டித் தொழுவதும் இஸ்திஃபார் பாவமன்னிப்புத் தேடுவதும் இஸ்லாமிய வழிமுறையாகும்.

அந்த வகையில் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று தினங்களும் நோன்பு நோற்பதோடு, மூன்றாம் நாள் புதன்கிழமை நோன்பு நோற்றவர்களாக மழை வேண்டித் தொழுகையில் ஆண்கள், பெண்கள், முதியோர்கள் என ஊர் மக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு தெரிவித்துள்ளனர்.

தொழுகைக்காக வருபவர்கள் வீட்டில் வுழூ செய்து கொண்டு முஸல்லாவுடன் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 9 ஆம் நாள் திருவிழா

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் 9 ஆம் நாள் திருவிழா பெத்தான்குடி மக்களினால் ஞாயிற்றுக்கிழமை (27) இரவு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதம குரு மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இத் திருவிழாவில், மூல மூர்த்தியாகிய தான்தோன்றீஸ்வரருக்கும், கொடித் தம்பத்திற்கும் பூஜைகள் நடைபெற்று பின்னர் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம் வந்ததைத் தொடர்ந்து தான்தோன்றீஸ்வரர் உமாதேவியர் சமேத ராய் விசேடமாக அமைக்கப்பட்ட சப்புறத்திலும், பிள்ளையார் மூசக வாகனத்திலும், முருகன் வள்ளி தெய்வானை சமேதராய் மயில் வாகனத்திலும், விஷ்ணுபகவான் குதிரை வாகனத்திலும், சண்டேசுவரர் எருது வாகனத்திலும். மேள தாள வாத்தியங்கள் முழங்க சுவாமிகள் வெளி வீதி வலம் வந்து திருவிழா நடைபெற்றது.

ஆலய தலைவர் இ.மேகராசா தலைமையில் நடைபெற்ற இத் திருவிழாவில் பெத்தான்குடி மக்களின் தலைவர் வா. தம்பித்துரைச்சாமி, பெத்தான்குடி மக்கள், ஆலய நிருவாகிகள், உள்ளிட்ட பல நூற்றுக் கணக்கான மக்கள் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

மாகாண மட்டத்தில் திறமை காட்டிய மாணவர்களால் பாடசாலைக்கு பெருமை

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர்

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

இம்முறை நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டி நிகழ்ச்சிகளின், மாகாண மட்ட போட்டிகளில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி, பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர் என கல்லூரியின் அதிபர் ஏ.எச். பௌஸ் தெரிவித்தார்.

இம் மாணவர்களை பாராட்டும் நிகழ்வு அதிபர் ஏ.எச்.பௌஸ் தலைமையில் பாடசாலை வளாகத்தில் திங்கட்கிழமை (28) இடம்பெற்றது.

இதன்போது பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம்.ஜாபீர், உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீல் மற்றும் மாணவர்களை தயார் படுத்திய ஆசிரியைகளான ஏ.நஹ்ஸீனா, எம்.ஏ.ஹக்கீமா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இவ்வாண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித் தின போட்டிகளின் மாகாண மட்டப் போட்டி நிகழ்ச்சிகள் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது சிறுகதை ஆக்கம் எழுத்தாக்கப் போட்டியில் கலந்து கொண்ட ஏ.எல்.பாத்திமா நுஸ்றா மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்று தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மாகாணமட்டத்தில் நடைபெற்ற எழுத்தாக்க கவிதைப் போட்டியில் பங்கு கொண்ட ஐ.பாத்திமாக றீஸா மூன்றாமிடத்தினைப் பெற்றுக் கொண்டார்.

இம்மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் துறைசார்ந்தோருக்கு வாழ்த்துக்களையும் நன்றியினையும் அதிபர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கி வரும் இராமகிருஷ்ண மிஷன்

காரைதீவு குறூப் நிருபர்

கடந்த 35 வருடங்களாக பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கு இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு கிளை மாதந்தோறும் உயர் கல்விக்கான உதவித் தொகைகளை வழங்கி வருகிறது. அந்த வகையில் இந்த வருடத்தில் புதிதாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதி கிடைக்க பெற்று, பல்கலைக்கழகத்தில் இணைந்து கொண்ட மாணவர்களுக்கான உதவித் தொகைகள் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை (26) கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அகஷராத்மானந்தஜீ மஹராஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், உதவு தொகை வழங்கி வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் கல்லடி சிறுவர் ஆச்சிரமத்தின் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், உதவி பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி சுரர்ச்சிதானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

ஒவ்வொரு மாதத்திற்கான கொடுப்பனவுகளும் மூன்று மாதத்திற்கு ஒருமுறை அவர்களுடைய வங்கி கணக்குகளில் வைப்பிலிடப் படுகின்றன.

மாணவர்கள் சிறந்த முறையில் அவர்களுடைய மேற்படிப்பை பூர்த்தி செய்யும் வரையிலும், அவர்களுக்கான உதவித் தொகைகள் மாதம் தோறும் வழங்கப்படுகின்றன. அத்தோடு சிறந்த முறையில் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கு பட்ட மேற்படிப் பிற்கான உதவிகளும் வழங்கப்படுகின்றன.

இரத்ததான முகாம்

கல்லடி குறூப் நிருபர்

மட்டக்களப்பு கல்லடி உப்போடை விவேகா பழைய மாணவர் சங்கம் நடாத்திய இரத்ததான முகாம், மட்டக்களப்பு விவேகானந்தா மகளிர் கல்லூரி சுவாமி நடராஜானந்தா மண்டபத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்தியர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ணமிஷன் உதவிப் பொது முகாமையாளர் சுவாமி சுரார்ச்சிதானந்தஜீ மகராஜ், இல்ல மாணவர்கள், தொண்டர்கள் மற்றும் கல்லடி உப்போடை விவேகா பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு குருதி வழங்கியிருந்தனர்.

நோயாளர் பதிவேட்டினை பேணிய வைத்தியசாலைகளுக்கு பாராட்டு

அக்கரைப்பற்று வடக்கு தினகரன், பாலமுனை விசேட நிருபர்கள்

உலக வங்கியின் அனுசரணையில் ஆரம்ப பராமரிப்பு சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கான பீ.எஸ்.எஸ். பீ செயற்றிட்டத்தின் மீளாய்வு கூட்டம், சனிக்கிழமை (26) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் நடைபெற்றது.

திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர்.எம்.சீ.எம் மாஹிர் ஏற்பாடு செய்யப்பட்ட இம் மீளாய்வு கூட்டத்தில் கல்முனை பிராந்திய சுகாதார பிராந்தியத்தில் உள்ள பிரதேச வைத்திய அதிகாரிகளும் ஆரம்பப் பராமரிப்பு சுகாதார பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இச்செயற்திட்டம் தொடர்பான மீளாய்வு கூட்டத்தில் கட்டுமானங்கள் நடைபெறுகின்ற வைத்தியசாலைகளின், கட்டுமானங்களை துரிதப்படுத்துவதற்கும் அதிலுள்ள பிரச்சினைகள் சவால்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கும் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

இதில் விசேட அம்சமாக பீ.எஸ்.எஸ்.பீ செயற்திட்டத்தின் மூலம் நோயாளர் பதிவேட்டினை சிறப்பாக பேணியமைக்காக பாலமுனை பிரதேச வைத்தியசாலை மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் இந் நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாணவர்களின் சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல்

பாலமுனை விசேட நிருபர்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் கீழ், கல்முனை பிராந்தியத்தில் உள்ள பாலர் பாடசாலை மட்டங்களில் சுகாதார மேம்பாட்டினை விஸ்தரிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் சனிக்கிழமை (26) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார, கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம். பைரூஸினால் ஒருங்கிணைக்கப் பட்ட இந்நிகழ்வில், வளவாளர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எச்.ரிஸ்பின், பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் டொக்டர் எம்.எச்.கே.சரூக் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாலர் பாடசாலைகளில் போசனை மட்டத்தினை அதிகரிப்பது, வாய் சுகாதாரத்தினை மேம்படுத்தி சிறுவர்களின் வாய் சுகாதாரத்தை பாதுகாப்பது, சிறார்களின் பொது சுகாதாரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந் நிகழ்வின்போது கலந்துரையாடப்பட்டன.

ஐஸ் போதை பொருளுடன் கைதான சந்தேக நபருக்கு விளக்க மறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பனங்காட்டுப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் செப்டம்பர் 7ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பனங்காட்டுப் பகுதியில் 37, 640 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை 72 மணித்தியாலம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து, விசாரணை மேற்கொள்ளுமாறும் விசாரணை முடிந்தவுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நீதிபதி கட்டளை பிறப்பித்திருந்தார்.

இவ்வாறு தடுப்பு காவல் விசாரணை நிறைவடைந்ததும் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பல்துறை சார்ந்த பெண்களுக்கு கௌரவம்

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த 160 பெண்களை பாராட்டி கௌரவிக்கும் விழா, ஹலோ TV ஹலோ FM நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் எப்.எம்.சரிக் தலைமையில் இடம்பெற்ற இவ் விழாவுக்கு, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்கா பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல்துறை, கலை, கலாசாரம், அரச மற்றும் அரச சார்பற்ற தொழிற்துறை சார்ந்த பல்வேறுபட்ட பெண்கள் இவ்விழாவின்போது பாராட்டப் பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில்

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவு வகுப்பறை

மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டம் உதவி

வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவு வகுப்பறையினைத் திறந்து வைக்கும் நிகழ்வு அதிபர் எஸ். செல்வராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியாவிலுள்ள மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் சுந்தரேசன் நடேசன் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக மாணவர்கள் பாவனைக்காக கையளித்தார்.

முன்னாள் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். மூக்கையா பிரதான வளவாளராகக் கலந்து கொண்டதுடன் அவுஸ்திரேலியாவிலுள்ள மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் சுந்தரேசன் நடேசன், இணைப்பதிகாரி குண்டசாலை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலத்தின் அதிபர் எஸ். சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் விசேட அம்சமாக இவ்விரு பிரமுகர்களும் மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் சுந்தரேசன் நடேசனால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.ஆசிரியர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

அவுஸ்திரேலியாவிலுள்ள மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் ஸ்தாபகர் சுந்தரேசன் நடேசன் உரையாற்றும் போது,..

இது ஒரு மகிழ்ச்சிகரமான நாள். அதே போல மகிழ்ச்சிகரமாக கல்வி தொழில் மேம்பாடு மற்றும் மென்பொருள் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கினை பிரிதொரு தமிழ் தோட்டப் பாடசாலையில் செய்தோம். மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சிறந்த முறையில் நடைபெற்றது. அந்த வகையில் கண்டி மாவட்டத்தில் தமிழ் பாடசாலைகளில் டிஜிட்டல் கல்வி வளத்தினை வழங்குவதற்கான செயற்றிட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

அடுத்த தலைமுறையினர்கள் அனைவரும் செயற்கை நுண்ணறிவு கல்வி முறையிலேயேதான் தங்கியிருக்கின்றனர். இன்றைக்கு கைத்தொலைபேசி இல்லாமல் இருக்க முடியாது. ஆகவே கல்வித் துறையில் தொழில் நுட்பம் வேகமாக வளர்ந்து வரும் இந்தக் கால கட்டத்தில் மலைநாட்டில் உள்ள தமிழ் தோட்டப் பாடசாலைகள் மிகவும் பின் தங்கியிருக்கின்றன.

நான் பிறந்த மண் ஹப்புத்தளை. நான் அவுஸ்திரேலியா நாட்டுக்குச் சென்று 32 வருடங்கள் ஆகிவிட்டன.அங்கு நான் ஒரு பொறியிலாளராக பணிபுரிந்தவன்.அதில் ஓய்வு பெற்றிருந்தாலும் இப்பொழுது அங்கு தமிழுக்கு உரை பெயர்ப்பாளராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் இருக்கின்றேன். அங்கு தமிழுக்கும் சைவத்திற்கும் நல்ல பணியாற்றியுள்ளேன். இதற்காக பல விருதுகளையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன். எனினும் நான் மலையகத்தில் பிறந்தவன் என்ற வகையில் மலையகத்திற்கு நிறைய பணிபுரிய வேண்டிய கடமைப்பாடு இருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

நாங்கள் எல்லாவற்றையும் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கக் கூடாது. வடக்கு கிழக்கைப் பொறுத்தவரையில் கடந்த கால யுத்த நெருக்கடியின் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தான் பிறந்து வளர்ந்த தன் பிரதேசத்தின் நன்மை கருதி உதவி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் மலையகத் தமிழர்களைப் பொறுத்த வரையிலும் வெளிநாடுகளில் வாழும் மலையகத் தமிழர்கள் பெரியளவில் செய்கின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது. ஆனாலும் அவர்கள் செய்ய வில்லை என்று கூற முடியாது. அவர்கள் நிறையச் செய்கிறார்கள்.இந்த நோக்கத்தின் அடிப்படையில் உருவானதுதான் மலையகத் தமிழர் கல்வி மேம்பாட்டுத் திட்டம். ஏற்கெனவே இந்த அமைப்பு இருக்கிறது. இதனைச் செயற்படுத்தி விரிபடுத்தும் பட்சத்தில் அறக்கட்டளையாக மாறும்.ஆனாலும் இது வளர்ச்சி பெற வேண்டும். எடுத்தவுடன் எங்களால் ஓட முடியாது. பிறந்து தவழ்ந்து நடந்து வளர்ந்தால் தான் ஓட முடியும். அந்த வகையில் பல ருடைய உதவியுடன் இத்திட்டம் நிச்சயமாக ஒரு பெரிய மரமாக வளரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இதற்கான வழிகாட்டலை வழங்கிய ஐயமிட்டுண் என்ற நிறுவனத்தின் இயக்குனர் முரளீதரன்.அவர் என்னுடைய நண்பர். அவர்கள் செய்யும் போது நாங்களும் ஏன் செய்ய முடியாது என்ற கேள்வியுடன் நமக்கென்று ஆரம்பித்திருக்கின்றேன்.

மலைநாட்டில் இருந்து வெளியேறி வெளி நாடுகளில் வாழ்கின்ற எத்தனையோ புலம் பெயர் மலையகத் தமிழர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எத்தனையோ உதவிகளைச் செய்யலாம்.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கை நுண்ணறிவுக்கான இணையவழி கல்வி உபகரணங்களை உங்களின் எதிர்கால கல்வி மேம்பாட்டுக்காக வழங்கி வைத்திருக்கின்றோம். இதில் எத்தனையோ கல்விக்கான வழிகள் இருக்கின்றன. கல்வித் திறனை மேம்படுத்துவதற்கான சகல வசதிகளும் அடங்கிய இயற்கை நுண்ணறிவு உபகரணங்கள் உங்கள் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் குறித்த கணிதப் பாட ஆசிரியர் ஒருவர் வரவில்லையெனில் இதன் மூலம் எமது கல்வியைத் தொடர்ந்து கற்றுக் கொள்ளலாம். ஓர் ஆசிரியர் சுகயீனம் காரணமாக ஒரு மாதம் விடுமுறை எடுத்தால் இந்தக் கருவியின் மூலம் கற்றுக் கொள்ளலாம்.

க. பொ. த. சாதாரண தரம், உயர் தர வகுப்பு மாணவர்களின் பாட விதானத்திற்கு ஏற்ப இந்த மின் பொறியியல் தொழில் நுட்பத்தின் மூலம் எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொள்ள முடியும். இதில் சிறந்த ஆசிரியர்கள் கற்றுக் கொடுப்பார்கள். இதில் ஆரம்ப முதல் 13 ஆண்டு வகுப்பு வரையிலும் உள்ள எல்லா வகுப்பு பிள்ளைகளும் படிக்கலாம். எல்லாமே காணொளியின் மூலம் பதிவு செய்து வைத்துள்ளார்கள். இதில் கல்வி கற்பதன் மூலம் எதிர்காலத்தில் உங்களை வேறு உலகத்திற்கு கொண்டு செல்லும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நீங்கள் தனியார் வகுப்புகளுக்குச் செல்லாமல் ஒன்றும் பண்ண முடியாது. மலை நாட்டில் உள்ள பிள்ளைகள் தூர இடங்களுக்குச் சென்று நல்ல ஆசிரியர்களிடம் கல்வி கற்க முடியாது. யாழ்ப்பாணத்தில் கணிதம் கற்பிக்கக் கூடிய சிறந்த ஆசியர் உங்கள் செயற்கை நுண்ணறிவு வகுப்பறையில் கல்வி கற்பிப்பார். எல்லாப் பாடங்களையும் இந்தக் கருவியின் மூலம் கற்றுக் கொள்ளலாம்.

நாங்கள் முதலாவது இந்த வேலைத் திட்டத்தை கண்டி குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயம், பாரதி தமிழ் பாடசாலை, கெங்கல்லை தமிழ் பாடசாலை மொத்தமாக ஐந்து பாடசாலைகளில் இவ்வகுப்பறைகளைச் செய்துள்ளோம். ஒவ்வொரு பாடசாலைளுக்குமிடையே ஒரு வலைப்பின்னலையும் உருவாக்கி ஒரு குழுமமாக செயற்பட வைத்துள்ளோம். நுவரெலியா மாவட்டம், பதுளை மாவட்டம் என்று இப்படி விரிவுபடுத்திக்கொண்டு செல்லுகின்றோம்.

இதற்கான நிதியை அவுஸ்திரேலியாவிலுள்ள நண்பர் தன் தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கினார். அவரை இந்த இடத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். அவர் தந்தையின் பெயர் அருணாச்சலம் பிள்ளை. இவரை இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவதற்கான காரணம். இந்த மாதிரியான வேலைகளை மற்றவர்கள் செய்ய வேண்டும். அதனால்தான் அவருடைய பெயரை அறிமுகம் செய்கின்றேன்.

ஐந்து வருடம் உத்தரவாதமிக்க மின் பொறியியல் தொழில் நுட்ப உபகரணங்களையே வழங்கியுள்ளேன். அதற்கு உரித்தான சகல உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய பொருட்களை வழங்கி வைப்பதில் நாங்கள் பெருமை அடைகின்றோம்.

மலையகக் கல்விக்கு ஒரு புதியதொரு முயற்சியை ஆரம்பித்து இதில் வெற்றி காண வேண்டும். இயன்றவரை நாம் செய்யும்போது எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று நம்புகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முக்கையா உரையாற்றும் போது,...

இலங்கையில் ஏறத்தாள 10,000 பாடசாலைகள் இலங்கையில் இருக்கின்றன. சுமார் 500 பாடசாலைகளை கடந்த பத்து வருடங்களில் மூடிவிட்டார்கள். அதற்கான பல காரணங்கள் உள்ளன. அதற்கான காரணங்களை அவர்கள் விளக்கிச் சொல்லும்போது நியாயமாகத் தான் தெரிகின்றது. அந்த நியாயத்தில் ஒன்று இந்தப் பாடசாலைகளில் போதிய மாணவர்கள் இல்லை. எல்லோரும் தாம் வாழும் பகுதிகளிலே உள்ள மிகத் தலைசிறந்த பெயர் வாங்கிய பாடசாலைகளிலேதான் தங்களுடைய குழந்தைகளைக் கொண்டு போய் சேர்க்க விரும்புகின்றனர். அது ஒரு யாதார்த்தமான நிலை. ஒவ்வொரு பெற்றோர்களும் அவ்வாறுதான் சிந்திக்கிறார்கள். அது குற்றமுமில்லை. அது சரியா என்பதுதான் அடுத்த கேள்வி.

இலங்கையிலே சராசரியாக 26 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் இருந்தால் போதும் என்ற நிலையில் நிர்வாகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் 4060 பேர் கொண்ட மாணவர்களை கற்பிக்க வேண்டிய பொறுப்பு சில ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அது சில பகுதிகளில் எனலாம்.10,20 ஆசிரியர்கள் இருந்து ஒரு பாடசாலையை நடத்தும் நிலையும் இருக்கின்றன.இதற்கான காரணம் குறிப்பாக ஆசிரியைகள் அவர்களுடைய கணவன்மார்கள் வேறு தொழில்களில் இருந்தால் அல்லது ஆசிரியர் தொழில்களிலேயே இருந்தால் அவர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நரகப் பகுதிகளுக்கே சென்று விடுகிறார்கள்.

தங்களுடைய மனைவிமார்களும் அங்கே கற்பிப்பவர்களாக இருந்தால் ஆசிரியர்களும் கடின உழைப்புடன் சிரமப்பட்டு அங்கு குறித்த பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுவார்கள். இது மனிதர்களுடைய இயற்கை சுபாவம். அதற்கு நாங்கள் குறை காண முடியாது. ஆனால் அரசாங்கம் எதற்கு இருக்கிறது. அரசாங்கம் எல்லாவற்றுக்கும் ஒரு சமநிலையைப் பேண வேண்டும்.

இலங்கையில் பின்தங்கிய பகுதியாக இருந்தால் என்ன வளர்ச்சியடைந்த பகுதியாக இருந்தால் என்ன? 26 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற முறையிலே மட்டும் இருத்தல் வேண்டும். அப்பொழுது போதியளவு சமமான முறையில் நிதி ஒதுக்கீடுகளைச் செய்து நிர்வாகத்தை சீராக நடத்தலாம். அது தான் நாட்டுக்கு நன்றாக இருக்கும்.இருப்பினும் நாட்டின் பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் அரசாங்கத்தினால் பாடசாலைகளுக்கு வளங்களை ஒதுக்கீடு செய்வது மிகச் சிரமமான காரியமாகும். நவீன தொழில் நுட்பகளுடன் கூடிய செயற்கையான நுண்ணறிவு வகுப்பு என்பது இந்தியாவில் சில கிராமப் பகுதிகளில் வெளிநாடுகளுக்காக மல்டி மீடியா பொரெஜக்ட்டர் உள்ளிட்ட சகல தொழில்நுட்ப கருவிகளும் இருந்தன.அங்கு அதனைக் கற்பிப்பதற்காக ஆசிரியர் மூன்று பேர் தான் இருந்தார்கள்.இதனைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இருந்தல் போதாது, அத்துறை சார்ந்த பயிற்சிகள் இருக்க வேண்டும். அந்த ஆசிரியர்கள் கற்பிக்கத் தயார் செய்கின்ற போது சரியான முறையில் தங்களை தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

தனியே லெப்டொப் இருந்தாலும் தனியே மல்டி மீடியா இருந்தாலும் போதாது.ஆசிரியர் இருந்தாலும் போதாது. அதற்குத் தேவையான அனைத்தையும் ஒன்று திரட்டிப் படிப்பித்தல் வேண்டும்.இவ்வாறான எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன.அந்த நிலையில் தான் சுந்தரேசன் நடேசன் அவர்கள் உட்பட்ட குழுவினர் அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு இவ்வாறான உதவிகளை குறிப்பாக பின்தங்கிய மலையகப் பாடசாலைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே வசதிகளை வழங்கி வருகிறார்கள்.

கல்வி என்பது ஒருவனுடைய கண் போன்றது. கல்வியில்லாத ஒருவனைப் பார்க்கும் போதுதான் அது எந்தளவு அத்தியாவசியமானது என்று தெரியும். நாம் ஏன் கல்வி கற்க வேண்டும். எமது மூதாதையர்கள் கல்வி கற்றார்களா என்று மூன்று பரம்பரைக்கு முன் சென்று பார்த்தால் குறிப்பாக இந்தியா வம்சாவளி மக்கள் இரண்டு தலைமுறையினரைப் பார்த்தால் அவர்கள் என்ன படித்தார்கள் அல்லது பாடசாலைக்குச் சென்று மழைக்குத் தான் ஒதுங்கி இருப்பார்களா? அல்லது ஒதுங்கத் தான் பாடசாலைகள் இருந்ததா? இலங்கையில் 812 தோட்டப் பாடசாலைகள் இருக்கின்றன. இந்தப் பாடசாலையில் எத்தனையோ குறைபாடுகள் உள்ளன. இதில் 400 பாடசாலைகள் தான் சரியான பௌதீக வளங்களைக் கொண்ட பாடசாலையாக அமைந்துள்ளன. நாம் இந்தச் சந்தர்ப்பத்தில்.இன்றைய ஜனாதிபதி ரணில் கல்வி அமைச்சராக இருந்த போது மறைந்த தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்கள் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனா அவர்களின் நல்ல நண்பன். அவருடன் நல்ல உறவு இருந்தது. அவரிடம் சென்று மலையகப் பாடசாலைகள் மிகவும் பின்தங்கியுள்ளது, உங்களது ஆட்சியில் ஏதாவது செய்து கொடுங்கள் என்று கேட்ட போது அப்பொழுது ஜே. ஆர். ஜயவர்தனா சீடா வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. மலையகப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய முழுவதையும் தருகின்றோம் என்று கூறினார்.

அந்த வேலைத் திட்டத்தின் கீழ் 400 தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட்டு பல்வேறு பௌதீக வளங்களுடன் தொழில்களுக்குச் சென்று தொழில் புரிபவர்கள் தமது நாட்டில் தம் பிள்ளைகளும் படிக்கின்றார்கள் என்ற அக்கறையில் பெருமளவு நிதி உதவியுடன் செய்கிறார்கள்.

இந்தியாவில் அண்மையில் ஒரு கிராமத்தில் உள்ள பாடசாலைக்குச் சென்றிருந்தேன். ஒரு பாடசாலையில் ஆறு நவீன தொழில் நுட்ப செயற்கை நுண்ணறிவு வகுப்பறைகள் இருந்தன. ஏனைய மாணவர்கள் மாறி மாறிச் சென்று போய் படிக்க வேண்டும்.லப்டொப், இன்றுகாணப்படுகின்றன. பாடசாலைக்குத் தேவையான வகுப்பறைக் கட்டடங்கள், அதிபர் விடுதி இப்படி அத்தியாவசிமான பௌதிக வளங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

கொட்டக்கலையில் ஆசிரியர் பயிற்சி கலாசாலையும் உள்ளது. அவர்கள் பயிற்று விக்கப்பட்டு வந்தாலும் அதில் ஒரு தொகையிலான பெண்கள் திருமணம் முடித்து விட்டு இடையில் நின்று விடுவார்கள். பயிற்சியுடைய ஆசிரியர்கள் தங்களுடைய கடமைகளை பொறுப்போடு செய்கிறார்களா என்ற கேள்வியும் இருக்கிறது. ஆனால் ஆசிரியர் குடும்பத்தில் அவர்களுடைய பிள்ளைகள் நல்ல பாடசாலையில் கற்பார்கள்.கற்றலுக்குரியத்தான சமூகத்தை வளப்படுத்துவதற்கான உள்ளீடுகள் இங்கு இல்லை. இவை எல்லாம் தாண்டித்தான் மலையகப் பிள்ளைகள் படிக்க வேண்டும்.

இப்படியாக கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு சுந்தரேசன் நடசேன் என்கின்ற பெரிய மனிதர் கை கொடுத்து நன்றாகப் படியுங்கள் என்று தங்களால் இயன்றளவு கல்விக்கான உதவிகளைச் செய்து வருகிறார்.

அவர்கள் வழங்கும் இவ்வாறான பொருட்களைப் பெற்று அலுவலகத்தில் மிகவும் பத்திரமாக வைத்துக் கொண்டிருக்கின்ற அதிபர்மார்களும் உள்ளார்கள். பிள்ளைகள் பயன்படுத்துவதற்கு வழங்க மட்டார்கள். இப்படியெல்லாம் அதிபர்மார்கள் இருக்கிறார்கள். இவையெல்லாம் தாண்டித் தான் இந்த மலையக மாணவர் சமூகத்திற்கு கற்பிக்க வேண்டி இருக்கிறது.

கல்வித் தேவையைத் தெரிந்து கொள்பவர்களிடமிருந்து நாங்கள் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒவ்வொரு குழந்தையும் தான் வாழப் போகும் உலகிலே தனது நலனைப் பாதுகாத்து மற்றவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் வளர்வதற்கு கல்வி அவசியமானது. சுமார் 46 இலட்சம் மாணவர்களுக்கு அரசாங்கம் பொருளாதார நெருக்கடியான காலத்திலும் கோடான கோடி நிதிகளைச் செலவு செய்து கொண்டிருக்கிறது. பத்தாயிரம் பாடசாலைகள் உள்ளன. ஆசிரியர்கள் 2 இலட்சம் பேர் பணிபுரிகிறார்கள். பல்கலைக் கழகங்களில் 4000 விரிவுரையாளர்கள் இருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான பேராசிரியர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பேர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும். அரசாங்கம் எவ்வளவு செலவுகளைச் செய்ய வேண்டும். அதனை அரசாங்கம் செய்யத்தான் வேண்டும் என்று ஒரு பிடியில் நிற்கின்றனர். அதனை செய்யாவிட்டால் குற்றம் என்கிறார்கள்.அரசி உற்பத்தி, விவசாய உற்பத்தி கைத்தொழிற் உற்பத்தி எனப் பல்வேறு வளங்கள் இருந்த போதிலும் மனித வளம் மிக அவசியம்.

மனித வளத்தைப் பெருக்குவதற்கு உலகில் அதிகளவு செலவு செய்யப்படுகிறது. அதில் முக்கியமானவைகளில் ஒன்று தான் கல்வி. அடுத்து சுகாதாரம் ஆகும்.

மலையகப் பெண்களில் உடல் ஆரோக்கியத்துடன் 26 நாட்களுக்கு வேலைக்குச் செல்லக் கூடிய தகுதியுள்ளவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். 5 விகிதமானவர்கள் கூட 26 நாட்களும் வேலைக்குச் செல்லமாட்டார்கள். அவர்களுக்கு வரக் கூடிய முக்கிய பிரச்சினை சளி. அவர்கள் வேலைக்குச் செல்லும் குளிர் அவர்களது உடையில் பட்டு உடம்பில் ஏறி தவிர்க்க முடியாமல் அந்த நோய் அவர்களுக்கு ஏற்பட்டு விடும். ஆய்வின்படி பெண்களுடைய முதல் பிரச்சினை தடிமல். இதற்கான அறிவும் வழிமுறைகளும் இருத்தல் வேண்டும்.

கல்வி இல்லாமல் மனிதனே இல்லை என்ற நிலைக்கு உலகம் வந்து விட்டது. சமூகப் பொறுப்புள்ள அங்கத்தவர்களாக செயற்பட வேண்டும். அப்போதுதான் இந்த நாடு வளரும். கல்வியின் நோக்கம் இந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டும். அதற்கு பங்குதாரர்களாக செயற்பட வேண்டும். உற்பத்தி மாத்திரமல்ல பிள்ளைகளுடைய எதிர்காலப் பாதுகாப்பு, மலையக சமூகத்தின் வளர்ச்சி, கலாசார வளர்ச்சி எல்லாமே பின்னிப் பிணைந்து இருக்கின்றது.

ஆகவே கல்வி என்பது பல்திசை பரிமாணங்களைக் கொண்ட ஒரு முக்கியமான கருவி. அதற்காக பல்வேறு தரப்பினர்கள் பல்வேறு வகையாக உதவி செய்து வருகிறார்கள். அரசாங்க உதவி மட்டும் போதாது. அதனை நிவர்த்தி செய்வதற்கு இங்கு வருகை தந்துள்ள சுந்தரேசன் நடேசன் போன்றவர்களும் உதவி செய்து வருகிறார்கள்.

இதன் ஒவ்வொரு படியிலும் இதன் முக்கியத்துவத்தை பிள்ளைகள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாங்கள் பிச்சைக்காரர்களாக இருப்பதற்குக் காரணம் அறிவைப் பகிர்ந்து கொள்வதில்லை. அறிவை அங்கீகரிப்பதில்லை. அதை ஏற்றுக் கொள்வதில்லை என்றார்.

இஸ்லாமிய விவகாரங்களை நெறிப்படுத்துவதில் பரஸ்பர ஒத்துழைப்புகள் அவசியம்

சவூதி அரேபியாவில் நடைபெற்ற சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் 85 நாடுகளைச் சேர்ந்த 150 கல்விமான்கள் வலியுறுத்தல்

தினகரனுக்காக
கலந்துரையாடியவர்
இக்பால் அலி

பிறகஹதெனிய, தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீட உப அதிபர், கலாநிதி M.R.M. அம்ஜத் ராசிக் PhD இம்மாத நடுப்பகுதியில் புனித மக்கமா நகரில் நடந்தேறிய சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் முன்வைத்த ஆய்வு சம்பந்தமான கலந்துரையாடல்.

கே: கலாநிதியவர்களே! ஏலவே நீங்கள் தினகரன் நேர்காணல் ஊடாக எமது வாசக நெஞ்சங்களுக்கு அறிமுகமானவர். கலாநிதிப் பட்டம் வரை நீங்கள் சவூதி அரேபியாவில் கல்வி கற்றவர். சவூதி பற்றிய ஆய்வுகளில் ஈடுபாடு கொண்டவர். இது சம்பந்தமாக ஏதும் புதிய கருத்துரைகளை பகிர்ந்து கொள்ள முடியுமா?

ப: ஆம்! சவூதி அரேபியாவில் கல்விகற்றுவிட்டு வந்தது முதல் அதனுடனான தொடர்பாடல்கள், அது சம்பந்தமான செய்திகளை நாளாந்தம் அறிந்துகொள்ளும் வழமை எப்பொழுதும் எனக்குள்ளது. குறிப்பாக ஆய்வியல் ரீதியாக நடைபெறும் கருத்தரங்குகளிலும் சற்று கவனம் செலுத்துவது வழமை. குறிப்பாக குறுகிய காலத்தில் பலம்வாய்ந்த நாடுகளுக்கு மத்தியில் சவூதி அரேபியா வீறுநடை போடுவது யாவரும் அறிந்ததே. ஆகவே அது சம்பந்தமான செய்திகளும் ஆய்வு ரைகளும் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

கே: இம்மாத நடுப்பகுதியில் சவூதி அரேபியாவில் மக்கமா நகரில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் இலங்கையிலிருந்து கலந்து கொண்டவர்களில் நீங்களும் ஒருவர். இவ்வாய்ப்பு பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

ப: உண்மையில் இவ்வாய்ப்பு அல்லாஹ்வின் கிருபையே அன்றி வேறில்லை. பல மாதங்களுக்கு முன்னர் இச்சர்வதேச கருத்தரங்கிற்கான ஆய்வுகள் கோரப்பட்ட வேலை நானும் ஒரு ஆய்வினை கருத்தரங்கின் இரண்டாம் கருப்பொருளின் கீழ் சமர்ப்பித்தேன். அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் கருத்தாடல்களை நேரடியாக முன்வைக்கும் சந்தர்ப்பத்தினை வல்லோன் அல்லாஹ் தந்தான். அல்ஹம்துலில்லாஹ்.

குறிப்பாக புனித பூமியாகிய சங்கைமிக்க மக்கமா நகரில் புனித கஃபாவின் நிழலில் மஸ்ஜிதுல் ஹராம் இன் அருகாமையில் அறிஞர்களுடன் ஆய்வுடன் கூடிய ஒரு சூழலில் சில நாட்களைக் கழிக்கும் வாய்ப்பு உண்மையில் மறக்கமுடியாத ஒரு அனுபவம்தான்.

என்னுடன் இக்கருத்தரங்கில் மல்வானை பின்பாஸ் மகளிர் அரபிக் கல்லூரியின் முதல்வர் கலாநிதி அஸ்ஹர் அவர்களும், காலி அல்பயான் கல்லூரியின் முதல்வர் அஷ்ஷேய்க் ஸஹ்ரூக் அவர்களும் எம் தாய் நாட்டிலிருந்து கலந்து கொண்டனர்.

கே: இக்கருத்தரங்கின் மகுடம் மற்றும் தொனிப்பொருள் என்ன? இதில் என்னென்ன தலைப்புகளில் ஆய்வுகள் முன்வைக்கப்பட்டன?

ப: இக்கருத்தரங்கின் மகுடம்: 'உலகளவில் இருக்கும் இஸ்லாமிய அலுவல்களுக்கான நிருவாகக் கட்டமைப்புகள், அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகள் போன்றவற்றிற்கிடையேயான தொடர்பாடலைப் பேணுவதும் (ஒருவரையொருவர்) பூரணப்படுத்துவதும்'.

இக்கருப்பொருளின் கீழ் பிரதான ஏழு உப தலைப்புகளைக் கொண்ட ஏழு அமர்வுகளில் 33 ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வேழு அமர்வுகளில் தலைப்புகளும் பின்வருமாறு:

1. இஸ்லாமிய அலுவல்களுக்கான நிருவாகக் கட்டமைப்புகள், அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகள் போன்றவற்றின் சேவைகள். குறிப்பாக இஸ்லாமிய ஒற்றுமைக்காக அவைகள் வகித்த பங்களிப்புகள்.

இவ்வமர்வில் இலங்கையைச் சேர்ந்த எனது சக நண்பர் கலாநிதி அஸ்ஹர் அவர்கள் ஒரு ஆய்வினை முன்வைத்தது குறிப்பிடத்தக்கது.

2. இஸ்லாமிய அலுவல்களுக்கான நிருவாகக் கட்டமைப்புகள், அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகள் போன்றவற்றிற்கிடையேயான தொடர்பாடல்களின் தற்போதைய நிலையும், எதிர்காலத்தில் அவற்றுக்கான பரிந்துரைகளும்.

இவ்வமர்விலேயே எனது ஆய்வினை முன்வைத்தேன்.

3. மக்களுக்கு மத்தியில் சகிப்புத்தன்மை மற்றும் சகவாழ்வினை மேம்படுத்தும் விடயத்தில் இஸ்லாமிய அலுவல்களுக்கான அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகள் போன்றவற்றின் சேவைகள்.

4. புனித அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னா (நபிகள் ஸல் அவர்களின் வழிமுறை) எனும் இரண்டினையும் பின்பற்றுவதற்கான அடித்தளமிடுதலும் அதுபற்றிய முன்னெடுப்புக்களும்.

5. நடுநிலை பேணும் விடயத்தில் புனித அல்குர்ஆன் மற்றும் அஸ்ஸுன்னாவின் ஒளியில் அடித்தளமிடுதலும் அதுபற்றிய முன்னெடுப்புக்களும்.

6. பயங்கரவாதம் மற்றும் தீவிரவாதத்தினை எதிர்க்கும் விடயத்தில் இஸ்லாமிய அலுவல்களுக்கான அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகளின் முயற்சிகள்.

7. நாத்திகம் மற்றும் ஒழுக்க சிதைவுகளில் இருந்து மனித சமுதாயத்தினை பாதுகாக்கும் விடயத்தில் இஸ்லாமிய அலுவல்களுக்கான அதிகாரசபைகள், பத்வாவுக்கான அமைப்புகளின் முயற்சிகள்.

கே: இரண்டாம் உப தலைப்பின் கீழ் உங்கள் ஆய்வினை முன்வைத்ததாகச் சொன்னீர்கள். உங்கள் ஆய்வின் தலைப்பு மற்றும் வலியுறுத்த விளையும் கருப்பொருள் யாது?

ப: உலகளாவிய இஸ்லாமிய அலுவல்களுக்கான அதிகாரசபைகள், அவைகளையொத்த அமைப்புகளுக்கிடையேயான பரஸ்பர ஒத்துழைப்புகளின் தற்போதைய நிலை சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சினை மையமாகக் கொண்ட ஒரு விளக்க ஆய்வு. என்பதே எனது ஆய்வின் தலைப்பாகும்.

இவ்வாய்விலே சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சினை மையமாக வைத்து இன்னும் இதர நாடுகளின் இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சுகளும் அதிகாரசபைகளும் தமக்கிடையேயான ஒத்துழைப்புகளை வலுப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகள், முன்னெடுப்புக்களின் தரவுகள் ஒரு விளக்க ஆய்வுமுறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேவேளை மேற்படி ஒத்துழைப்புகளைப் பேணுவதற்கு இதுவரை கடைப்பிடிக்கப்பட்ட வழிவகைகள், மற்றும் எதிர்காலத்தில் அவ்வொத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக கல்வி, அழைப்புப் பணி, நலன்புரி சேவைகள் மற்றும் தீவிரவாதத்திற்கெதிரான முன்னெடுப்புக்கள் விடயத்தில் உலகளாவிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அதிகாரசபைகள்; குறிப்பாக சவூதி அரேபிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அமைச்சு மேற்கொண்ட முயற்சிகள் பட்டியல் படுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறான ஒத்துழைப்புகளை மேம்படுத்துவதற்கான சில வழிமுறைகள் பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக உலகளாவிய இஸ்லாமிய விவகாரங்களுக்கான அதிகார சபைகள் பிற நாடுகளின் சக அதிகார சபைகளுடன் ஒத்துழைப்புகளைப் பேணும் பொருட்டு ஒரு வெளிவிவகாரப் பிரிவினை தங்களின் நிர்வாகக் கட்டமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவையும் ஆய்வின் முடிவுரையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

